REGISTERED No. M. 6165. அணு 2

16

16/2-56

# பத்ஹுல் இஸ்லாம்

# FATH-HUL-ISLAM

மாத பத்திரிகை

ஏப்ரல் 1956.

OFFICE OF THE REGISTRAR ... 2 ... 195 ... MADRAS


| விஷயம். | பக்கம். |
|---|---|
| இஸ்லாத்தின் பரிபூரணத் தன்மை | ... ... 1 |
| திருக் குர்ஆன் சார சங்கிரஹம் (ரஹ்மத் பாகவி) | ... ... 7 |
| மூளை பலத்தால் முன்னேறியவர் (முஹம்மது தாவூது) | ... ... 15 |
| நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் குர்ஆனின் நல்லுபதேசமும் | ... ... 18 |
| நாடோடி இளவரசன்: சிறுவர் பகுதி (டி. எப். ஆர். மஆலி ஸாஹிப்-பாகவி) | ... ... 25 |


...ல் இஸ்லாம் ஆபீஸ் :
...ஹரோட், திருவல்லிக்கேணி,
மதறாஸ் 5.

JL
Q7ணா211,N24FL
1456
187051

# பத்ஹுல் இஸ்லாம்.

சந்தா விபரம்: இந்தியா, பாகிஸ்தான், ஸிலோனுக்கு

| | | |
|---|---|---|
| வருஷ சந்தா | ரூ. | 1–8–0 |
| தனிப் பிரதி | அணா. | 0–2–0 |
| மற்ற வெளி நாடுகளுக்கு வருஷ சந்தா | ரூ. | 2–0–0 |

எல்லா ஊர்களிலும் ஏஜெண்டுகள் தேவை. எல்லா விஷயங்களுக்கும் கீழ்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

மானேஜர்,
பத்ஹுல் இஸ்லாம்,
20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.


## கல்ஃஸர் நாமா.

(இரண்டாம் பதிப்பு)

பாத்திமா நாயகியின் கல்ஸர் என்னும் ஆபரணத்தின் வரலாறு, இது உர்துவி லிருந்து சுத்தத் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டது. இதன் விலை அணா. 2

ஷை அரபுத் தமிழ் விலை அணா. 3

## விறகு வெட்டியார் கிஸ்ஸா.

(மூன்றாம் பதிப்பு)

இது உர்துவி லிருந்து சுத்தத் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டது. ரஜப் மாதம் ஓதும் பாத்திஹாவின் காரணமும், வரலாறும் கூறப்பட்டிருக்கின்றன. விலை அணா. 4

ஷை அரபுத் தமிழ் விலை அணா. 8

கிடைக்குமிடம் :—

ஹாஜி எம். ஏ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்
நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

'பத்ஹுல் இஸ்லாம்'

ஏப்ரல்—1956.

## இஸ்லாத்தின் பரிபூரணத் தன்மை

**பரிசுத்த** தீனுல் இஸ்லாம் மிகப் பரிபூரணமான சன்மார்க்கம் என்பதில் சிறிதும் சந்தேகம் கிடையாது. இயற்கையாய் அமைந்த இஸ்லாமிய ஷரீஅத்தில் எத்தகைய குறைபாடும் கிடையாது. குர் ஆனுக்கும் ஹதீதுக்கும் ஒத்தமைந்த இஸ்லாமியச் சம்பிரதாய தரீகத்தில் எவ்விதமான மாறுதலுக்கும் அவசியமில்லை.

இதே விதமாக நமது ஹஜ்ரத் நபிகள் நாயகம் முஹம்மத் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள், அல்லாஹு தஆலாவுடைய உண்மையான திருத்தூதர்-நபி-ரஸூல்-தீர்க்கதரிசி என்பதிலும் எவ்வித சந்தேகமும் கிடையாது. அத்தூய நபிகள் நாயகம் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள் கடைசியாக வந்த ஆகிர் நபி என்பதிலும், சாஸ்வதமான வழி காட்டி 'ஹாதி' என்பதிலும் கிஞ்சித்தும் சந்தேகமில்லை. இதன் கருத்தாவது:மஹான் முஹம்மத் (ஸல்) அவர்களுக்குப் பிறகு உலகத்தில் எந்தப் பகுதிக்கும் எந்த தேசத்துக்கும் எந்த சமூகத்துக்கும் ஒரு புது நபி வர வேண்டிய அவசியமே கிடையாது. அங்ஙனம் 'ஒரு புது நபி வருவது தகுமானது' என்று நம்பிக்கை கொள்வது 'இஸ்லாம் பரிபூரணத் தன்மை வாய்ந்த சன்மார்க்க மல்ல' என்பதை ஒத்துக் கொள்வது போலாகும்.

இஸ்லாமே இகபர ஈடேற்றம் தரும் சன்மார்க்கமாகும். இதற்குரிய பரிபூரணமான போதனையை, குர்ஆன் மஜீத் மூலமாகவும், ஹதீது ஷரீப் வாயிலாகவும் நமது நபிகள் நாயகம் ரஸூலுல்லாஹி

(ஸல்) அவர்கள், நம்மனோர் எல்லோருக்கும் அனுஷ்டானம் மூலம் விளக்கிக் காட்டி போதித்துப் போயுள்ளார்கள். இதை நாம் 'ஸிராத்தும் முஸ்தகிம்' (நேர்மையான பாதை) என்று சொல்கின்றோம்.

"யாஸீன் வல் குர்ஆனில் ஹகீம், இன்னக லமினல் முர்ஸலீன, அலா ஸிராத்திம் முஸ்தகீம்"

என்று திருக்குர்ஆன் மணிமொழி சாக்ஷியம் பகர்கின்றது. "ஏ லோகத் தலைவரே, விவேகம் மிகுந்த குர்ஆன் திருமறை மீது பிரமாணமாக: (நபியே) நிச்சயமாக நீவிர் ரஸூல்மார்களில் (சிறந்தவராக) இருக்கின்றீர். மேலும் நேர்மையான மார்க்கத்தின் பால் நிலைத்திருக்கின்றீர்" என்பது இதன் கருத்துரையாகும்.

நபிகள் நாயகம் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள் நேர்மையான சன்மார்க்கத்தின் பால், அனுஷ்டான பூர்வமாக ஸ்திரமாக இருந்து, அதன் சட்டதிட்ட ஒழுங்கு முறைகளையே இஸ்லாமிய சமூகத்தினர்க்கு இனிது போதித்தார்களென்பதில் சந்தேகமே இல்லை.

இறைவன் தன் திருக்குர்ஆனில் இன்னோர் இடத்தில் "இன்னக லதஹ்தீ இலா ஸிராத்தின் முஸ்தகீம்" என்றும் திருவுளமா யிருக்கிறான். அதாவது "நபியே நிச்சயமாக நீவிர் நேர்மையான மார்க்கத்தின் பிரகாரமே (ஜனங்களுக்கு) நல்வழி காட்டுகின்றீர்கள்" என்பது இதன் கருத்துரை.

இதனாலெல்லாம் விளங்குவது யாதெனில்: பரிசுத்த தீனுல் இஸ்லாமானது தூய்மையோடு பரிபூரணத் தன்மை வாய்ந்த-காமிலான தீன் என்னும் சன்மார்க்கம் என்பதாகும். இந்தப் பரிசுத்தமான சன்மார்க்கத்தில், மனிதர் குல வாழ்வுக்கு வேண்டிய, எல்லாத் துறை விஷயங்களும் இனிது போதிக்கப்பட்டிருக்கின்றன. அப்போதிருந்த மனிதர்களுக்கும், இப்போதிருக்கும் மனிதர்கட்கும், இனி வரப்போகும் மனிதர்கட்கும் வேண்டுமான எல்லா விவகாரங்களும் பிரச்னைகளும் போதிக்கப்பட்டிருக்கின்றன. எந்தத் துறையிலும் எந்தக் குறையையும், இஸ்லாமிய ஷரீஅத்து விட்டு வைக்கவில்லை.

எனவே, பொழுது புலர்ந்து பொழுது மறையும் வரையும், வானம் இருண்டு மறுநாட் காலை உதய காலம் வரைக்கும், தினமும் என்னென்றைக்கும் மனிதன் என்னென்ன செய்ய வேண்டும், என்னென்ன நினைக்க வேண்டும், எப்படி உறைய வேண்டும், எப்படி

18705

உழைக்க வேண்டும், எப்படி உண்ண வேண்டும், எப்படி உறங்க வேண்டும் என்ற வாழ்க்கை முறையை யெல்லாம் இஸ்லாமிய ஷரீஅத்து என்னும் கிதாபும் ஸுன்னத்தும் நமக்கு எடுத்துப்போதித்திருக்கின்றன. தீனுக்கும் துனியாவுக்கும் வேண்டிய எல்லா வகை வழியும் நமக்கு காண்பிக்கப்பட்டுள்ளன.

ஆகையால் இஸ்லாம் மதம் நம்மவர்க் கெல்லாம் இறைவனுலருளப் பெற்ற 'நிஃமத்' என்னும் ஓர் அருட்பாக்கியமாகும்.

"உங்கள் மீது அல்லாஹ் புரிந்த (இஸ்லாம் எனும்) அருட்பாக்கியத்தை நினைத்துப் பாருங்கள்; மேலும் நீங்கள் உபதேசம் பெற்று ஒழுகுவதற்காக, வேதமும் விவேகமும் உங்களுக்காக இறக்கி வைத்தருளியதையும் (நினைத்துப் பாருங்கள்). (திருக்குர்ஆன் மொழி.)

"இறைவனாகிய நான் இன்று, உங்களுக்குரிய தீன் (எனும் சன்) மார்க்கத்தைப் பரிபூரணமாக்கி வைத்துள்ளேன். மேலும் அதைக் கொண்டு என்னுடைய (அருட் பாக்கிய மெனும்) நிஃமத்தை உங்கள் மீது பரிபூரணமாக்கி வைத்துள்ளேன். (அது மட்டுமல்ல) மேலும் இஸ்லாத்தையே உங்களுக்குரிய சன்மார்க்கம் என்றும் நான் பொருந்தி (ஏற்று)க் கொண்டேன்"—(திருக்குர்ஆன் மொழி.)

இங்ஙனம் அல்லாஹு தஆலா, நமக்கு தீனுல் இஸ்லாத்தை, இக பரத்துக்குரிய இணையிலா சன்மானமாக (நிஃமத்தாக) அருள் புரிந்து விட்டு, சும்மா யிருந்து விடவில்லை. (ஏ நபியே, ஏ முஸ்லிம்களே, "வ அம்மா பிநிஃமதிக பஹத்திஸ்") எனவே நீர் உம்முடைய இரக்ஷகன் அளித்த நிஃமத்தை, (இஸ்லாத்தை பிறர்கட்கும்) போதித்துப் பரத்துவீராக" என்று இறைவன் எல்லோருக்கும் கட்டளை யிட்டுள்ளான். அதாவது இஸ்லாமிய பாக்கியம் என்னும் அமிர்தத்தை நாம் மட்டும் அருந்தி சுகமனுபவித்திருந்து விடாமல், பிறஜனங்களுக்கும் அதன் அரும் பெரும் போதனைகளைப் பிரசாரம் செய்ய வேண்டும், அதாவது தப்லீக் பிரசாரம் செய்ய வேண்டும், இஷாஅத்துல் இஸ்லாம் செய்ய வேண்டும் என்பது கருத்தாகும்.

முஸ்லிம்களாகிய நாமெல்லாரும் ஸிராத்துல் முஸ்தகீம் என்னும் நேர்மையான மார்க்கத்தின் மீதே நிலைத்திருக்கிறோம் என்பது மேற்கண்ட திருவாக்கியங்களால் மிகத் துலக்கமாய் விளங்கிவிட்டது. ஸிராத்துல் முஸ்தகீம் பிரகாரம் நாமும் நடந்து கொண்டு,

நம்மை யடுத்துள்ள பிற முஸ்லிம் சகோதரர்கட்கும் அதன் நன்மைகளைப் பகிர்ந்தளித்து அவர்களும் கடைத்தேறும் வண்ணம் நாம் சேவை செய்ய வேண்டும் இது நமது அறிக்கடமையாகும்: மேலும், இந்த ஸிராத்துல் முஸ்தகீம் என்னும் சன்மார்க்கம் முஸ்லிம்களுக்கு மாத்திரமல்ல— பொதுவாக உலக மன்பதைகள் எல்லோருக்குமே அத்தியாவசியமானது- இதையே எல்லோரும் பின்பற்றி நடக்கும்படிச் செய்யவேண்டும் என்பது ஆண்டவனின் கட்டளை என்பதும் மேற்கூறிய திருவாக்கியங்களால் நிரூபணமாகிறது.

மனித சமூகத்தினர் இயற்கையின் சட்டதிட்டப்பிரகாரம் பிறக்கிறார்கள். இயற்கையின் கட்டுப்பாட்டிலேயே வளர்கிறார்கள். அங்ஙனம் வளர்ந்து அறிவும் விவேகமும் பெற்றதும், இயற்கைச்சட்டத்தை மீறி, மனம்போனபடி யெல்லாம் நடந்துழல விழைகின்றார்கள். அப்படியெல்லாம் அவர்கள் மனம்போன போக்கெல்லாம் உழன்று சீரழியக் கூடாதென்றே, இயற்கைக்கும் செயற்கைக்கும் மிக மிக ஒத்தமைந்ததான ஸிராத்துல் முஸ்தகீம் என்னும் செவ்விய சீரான சன்மார்க்கமான இஸ்லாமை, சர்வலோக சகல மனிதர்களுக்குமென ஆண்டவன் அருள் புரிந்தான்.

இஸ்லாம் என்னும் பாக்கியம் நமக்கு எங்ஙனம் கிடைத்ததென்பதை நாம் எண்ணிப் பார்த்துப் பயனுற வேண்டும். கிதாபு என்னும் திருவேதம் நமக்கு அருளப்பட்டிருக்கிறது. அதனை நாம் ‘குர்ஆன்’ என்று கூறுகின்றோம். குர்ஆன் என்றால் ‘ஓதுவதற்குரிய நூல்’ என்று பொருள்படும். ஓதுவது என்றால் படித்துப்பார்ப்பது. படித்துப்பார்ப்பது என்றால் அதன் போதனைப் பிரகாரம் நடந்து கொள்வது என்பது கருத்தாகும்.

நமது தீனுல் இஸ்லாத்தின் அருட்பாக்கியமாகிய குர்ஆன் வேதம், தினமும் ஓதிப் படிப்பதற்காகவும், படித்துணர்ந்த வண்ணம் அனுஷ்டானம் புரிவதற்காகவுமே அருளப்பட்ட சீரிய சிறந்த கிரந்தமாகும். எனவே, குர்ஆனுக்கு தீன் என்றும், வஹ்யி என்றும், கானூன் என்றும், கிதாப் என்றும் பல பெயர்கள் உண்டு. இது சன்மார்க்கத்துக் குரிய வழிகாட்டியாகவும், மனம் தெளிவதற்காக அருளப்பட்ட வஹ்யி என்னும் ஞானோதயமாகவும், ஹயாத் என்னும் வாழ்க்கைக்குரிய அனுஷ்டானத் திட்டமாகவும், சகல விஷய

ஆராய்ச்சிக்கும் உறுதுணையாக விளங்கும் சட்டக் கலாசாரப் புத்தகமாகவும் விளங்குகிற தென்பதில் சிறிதும் சந்தேகமில்லை.

ஏனெனின், முஸ்லிம் சமுதாயத்தினர் உலகமெல்லாம் இன்று, வாழ்க்கைக்கும் உலக விபவகாரங்களுக்கும் அரசியல் அமைப்புகளுக்கும் முன்னேற்றத் திட்டங்களுக்கும், திருக்குர்ஆன் போதனையை அடிப்படையாகக் கொண்டே தான் சட்ட திட்டம் இயற்றி அரசாட்சி நடத்திவருகிறார்கள்.

அரசியல் விஷயம் ஒருபக்க மிருக்கட்டும். இங்கு நாம் ஆன்மார்த்தத் துறையைத்தான் பிரதானமாகக் கொள்ளவேண்டும். ஆத்மார்த்தத் துறைக்கு வழிகாட்டியாய் விளங்குவதும், விசிராந்தியளிப்பதும் இகபர முன்னேற்றத்துக்குரிய போதனை நிறைந்ததுமான வேதம் குர்ஆன் ஷரீப் ஒன்றேயாகும். இதற்கு இணையான திருமறை உலகில் எங்கணும் கிடையாது; எந்த மதத்தினராலும் போதிக்கப்பட்டதும் கிடையாது. ஆதலினால்தான், ஐரோப்பியர்களும் அமெரிக்கர்களும் ரஷ்யர்களும் மற்றும் உலக மக்களில் அறிஞர்களாயிருப்போ ரெல்லோரும், குர்ஆன் ஷரீபைப் பாராட்டுகின்றனர்; அதன் போதனைகளைத் தம் ஆங்கிலம், பிரெஞ்ச், ஜெர்மனி, லத்தீன், ரஷ்ய பாஷைகளிலெல்லாம் மொழி பெயர்த்துப் படித்துப் பார்த்துப் பயனடைகின்றனர்; பல்லாயிரக் கணக்கான பிரதிகளை, சகாய விலைக்கு அச்சிட்டு உலகமெல்லாம் பரத்துகின்றனர். முஸ்லிம்கள் செய்ய வேண்டிய ஒரு காரியத்தை முஸ்லிம் அல்லாதவர்களே செய்து வருகின்றன ரென்றால் அதன் மகிமையை சொல்லி விளக்க வேண்டுமோ!

பிரிட்டிஷ் நாட்டிலும், அமெரிக்க நாட்டிலும், ரஷ்ய தேசத்திலும், இன்று குர்ஆன் போதனை பரவி வருகிறது; இஸ்லாம் மதம் வியாபித்து வருகிறது; முஸ்லிம்களின் தொகை பெருகி வருகிறது. இஸ்லாத்தைப் பற்றிய சிறப்பான பேச்சும் ஆராய்ச்சியும் வியாபித்து வருகின்றன. யாரேனும் அங்கு புதிய 'நபி' தோன்றினாரா? 'ரஸூல்' அவதரித்தாரா? தீர்க்கதரிசி கிளம்பினாரா? இல்லவே இல்லை. நபிகள் நாயகம் முஹம்மது ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்களுக்குப் பிறகு எந்த நபியும் வரவில்லை; எந்த தீர்க்கதரிசியும் தோன்ற வேண்டிய அவசியமில்லை. அப்பெருந்தகையாளர் நபிகள் பிரான் (ஸல்) அவர்கள் மூலம் போதிக்கப்பட்ட 'திருக் குர்ஆன்' சாஸ்வதமான ஜீவிதம் பெற்றது; என்றென்றும் ஒளி குன்றாமல் வியா

பிக்கும் தன்மை யுடையது; 'ஜிந்தா முஃஜிஸா' என்னும் மகிமை பெற்றது. அதாவது பண்டைய நபிமார்களும் ரஸூல்மார்களும் தங்கள் ஜீவிய காலத்தில் ஜனங்களுடைய உள்ளத்தில், அபிமானத்தையும் நம்பிக்கையையும் உண்டாக்குவதற்காக 'முஃஜிஸா' என்னும் அற்புதக் காரியத்தை செய்து காட்டுவார்கள். அதை ஜனங்கள் வியப்புடன் நோக்கி, நம்பி வழிபடுவார்கள்.

இத்தகைய முஃஜிஸாவை செய்து காட்ட இப்போது அதாவது இந்த 1300-க்கு மேற்பட்ட வருஷங்களாக, எந்த நபியும் எந்த ரஸூலும் தோன்றவில்லையாயினும், இஸ்லாமியத் திருவேதமாகிய குர்ஆன் ஷரீப் விஷயத்தில் மட்டும் 'முஃஜிஸா' நடந்து கொண்டே தான் இருக்கிறது. அதாவது புது நபியின் தோற்றம் இல்லாமலே, போதனை இல்லாமலே, வற்புறுத்தல் இல்லாமலே, பிரசாரம் இல்லாமலே, குர்ஆன் ஷரீபின் போதனை உலக மெல்லாம் சர்வ திக்கிலும் சகல நாட்டிலும் வியாபித்துக் கொண்டேதான் போகிறது. இது இஸ்லாத்தின், திருக் குர்ஆனின் அமரத்துவமான அற்புதம் என்னும் ஜிந்தா முஃஜிஸாவே யாகும்.

இது எதை விளக்குகிறது என்பதை ஓர்ந்து பாருங்கள், முஸ்லிம்களே! இஸ்லாம் பரிபூரணத் தன்மை வாய்ந்த சத்திய சன்மார்க்க மென்பதையே விளக்குகிறது. இஸ்லாம் ஒரு காமிலான மதம். குர்ஆன், அமரத்துவம் வாய்ந்த திருவேதம். உலகம் உள்ளளவும் இஸ்லாமியக் குர்ஆன் ஜோதிச் சுடர், அகில லோக எண்டிசை எங்கணும் பரவி வியாபித்து, எல்லா நாட்டார்க்கும் எல்லா வர்க்கத்தாருக்கும் சமத்துவமான நன்மை யளித்துக் கொண்டிருக்கு மென்பதில் ஐயமில்லை. வாழ்க இஸ்லாம்; ஓங்குக குர்ஆன்.

(17-வது பகுதி)

# திருக் குர்ஆன் : : : :

## : : : : சார சங்கிரஹம்

### பல விஷயங்கள் பற்றிய பல ஆயத்துகள்.

(ரஹ்மத் பாகவி)

## பூகம்பத்தால் அழிந்த ஷுஐபு நபிக் கூட்டத்தார்.

(இறைவனாகிய) யாம், மத்யன் (என்ற) பிரதேசக்காரர்கள் புறத்தில், அவர்களுடைய (இன) சகோதரராகிய ஷுஐபை நபியாக்கி அனுப்பிவைத்தோம். அவர் தம் ஜனங்களை நோக்கி போதித்ததாவது: "ஏ எனது இனத்தினரே, ஒரே ஆண்டவனை வணங்குங்கள். அவனைத் தவிர்த்து வேறு (உண்மைத்) தெய்வம் கிடையாது. (இது விஷயமாய்) ஏற்கெனவே, இரக்ஷகனிடமிருந்து உங்களுக்கு விளக்கமான (போதனை) அத்தாக்ஷி வந்திருக்கிறது. (நானும் அதை உங்களுக்குப் போதிக்கிறேன்.) ஆகவே நீங்கள், நிறுத்தலி லும் அளத்தலிலும் (கள்ளத்தனம் செய்யாமல்) பூர்த்திப்படுத்திக் கொடுங்கள்: (வாங்க வரும்) கொள்வினைக்காரருக்கு, அவர்களுக் குரிய (விற்பனைப்) பொருளில் (மோசடி) குறைத்தல் செய்யாதீர்கள். தேசவிஷயங்களில் இணக்கமும், நிர்வாக விஷயங்களில் ஒழுங்கும் ஏற்பட்ட பின், (அதைக் குலைத்து) குழப்பத்தை (பஸாதை) உண்டு பண்ணாதீர்கள். நீங்கள் (வாஸ்தவத்தில்) பக்தி யுடையவர்களா யிருந்தால், இஃதெல்லாம் உங்களுக்கு (நன்மை பயக்கும்) நல்ல விஷயங்களாய் இருக்கும். (ஜனங்களே, தற்போது) நீங்கள் ஒவ் வொரு நல்ல பாதையிலும் முட்டுக்கட்டையை போட்டு வருகிறீர்கள். (எளிய) பொதுஜனங்களை அனுவசியமாக மிரட்டி இம்சிக்கிறீர்கள். (பக்தர்களான) மூமின்களை, அல்லாஹ்வுடைய சன்மார்க்கத்தில் செல்ல விடாமற்படி தடுத்துவருகிறீர்கள்; அந்த (உத்தம) ஜனங் களின் (சொற் செயல்) விஷயத்தில், குற்றங்குறையை துருவி எடுக் கிறீர்கள் இனி இப்படியெல்லாம் செய்யாதீர்கள். நீங்கள் (பலங் குறைந்த) சிறுபான்மையினரா யிருந்தீர்களே, உங்களை(பலம் மிக்க) பெரும்பான்மையினராக்கி வைத்தானே அந்த (மகா) விஷயத்தை எண்ணிப்பாருங்கள். (முன்னர்) தீங்கு செய்த துச்சர்களின் முடிவு காலம் யாதாயிற் றென்பதை நன்ருய் யோசித்துப் பாருங்கள். தற் போது, உங்களில் ஒரு (சிறு) கூட்டத்தார் மட்டும்தான் என் னுடைய நபித்துவத்தை ஒப்புக்கொண்டுள்ளனர்; மற்றும் ஒரு (பெருங்) கூட்டத்தினர், நன்னம்பிக்கை கொள்ளாமல் முரண்டிருக் கின்றனர். இது விஷயத்தில் நீங்கள் பொறுமையோடு (ஆலோசனை செய்து) பாருங்கள். அல்லாஹ்வு (தஆலா) உங்களுக்கிடையில்

(நன்மை-தீமைக்காக) தீர்ப்புச் செய்யும்வரை காத்திருங்கள். நம்மில் யார் சன்மார்க்கத்தின் மீது இருக்கின்றனர் என்பது வெளிப்படட்டும். ஏனெனின் அவ்விறைவனே, சரியான அதிகாரியாகவும் நன்கு தீர்ப்பு செய்பவனுகவும் இருக்கிறுன்” என்பதாகும் (அப்போதனே!).

(நபி) ஷுஐபுடைய இந்த (உபதேச) மொழிகளைக்கேட்ட அந்தக் கூட்டத்தாரில் (அகந்தைக்கார) அந்தஸ்துடைய பெரிய மனிதர் என்போர் (அந்த நபியை நோக்கி) “ஏ ஷுஐபே! (உமது போதனை கிடக்கட்டும்; முதலில்) நீவிர் எம்முடைய (விக்கிரக) மார்க்கத்தில் வந்து சேர்ந்துகொள்க! இன்றேல், உம்மை உம்முடைய (இனமித்திர) கூட்டத்தார் சமேதராய், (எங்கள்) இந்த (மத்யன்) நகரத்தை விட்டே அடித்துத் துரத்திப் போடுவோம்” என்று (முரண்டு) கூறினர்கள்.

(இதைக் கேட்டு) அந்த ஷுஐபு(நபி) “நாங்கள் அந்த (விக்கிரக வணக்கச்) செயலைவிட்டு வெறுப்படைந்து கிடக்கும்போது இப்படிப்பட்ட நிலையிலா, நாங்கள் உங்களுடைய (பாபம் நிறைந்த) மார்க்கத்தில் திரும்பி வரப்போகின்றேம், (முடியாது). எங்களை இறைவன், உங்களுடைய பொய் நிறைந்த மார்க்கத்திலிருந்து காப்பாற்றி தூய்மைப் படுத்திய பிறகா நாங்கள் மாறுவோம், (முடியாது, முடியாது); நாங்கள் (உங்கள் வழிக்குத்) திரும்பி வருவதானது, (எல்லாம் வல்ல) அல்லாஹ்வின் மீது அபவாதம் சுமத்துவதுபோலாகும். இச்செயல் (தூயவர்களாகிய) எங்களுக்கு அழகு தரமாட்டாது. நாங்கள் ஒருபோதும் உங்கள் பொய்யான மார்க்கத்திற்கு திரும்ப மாட்டோம். மேலும், எங்களுடைய இரக்ஷகன் ஏகனுகிய இறைவனுவன்; இங்ஙனம் நாங்கள் ஸ்திரமாய் இருப்பதே அவனுடைய திருப்தியாகும். எங்கள் இறைவன் எல்லா விஷயங்களையும் அறிந்து, அதன்பால் ஆதிக்கங் கொண்டவனுவன். எனவே நாங்கள் (தீர்க்கமாய்) அந்த அல்லாஹ்வின் மீதே முழு நம்பிக்கையும் வைத்திருக்கின்றேம்” என்று (முடிவு) கூறிவிட்டார்கள்.

அத்துடன் “ஏ, எங்கள் இரக்ஷகனே! உன் (மார்க்க) விஷயமாய், எங்களுக்கும் எங்கள் கூட்டத்தாருக்கு மிடையில் விகல்பம் உண்டாய்ப் போயிருக்கிறதே இது விஷயத்தில், எது சத்தியமும் உண்மையும் நிலவியிருக்கிற தென்பதற்கு நேர்மையாய் நீயே தீர்ப்பு செய்து விடுவாயாக! நீயே மகா நியாயம் வழங்குபவனுக இருக்கின்றுய்” என்று சொல்லி விட்டார்.

நபிஷுஐபுடைய ஜனங்களிலேயே (சிலர்)—நபித்துவத்தின்பால், (நம்பிக்கை கொள்ளாமல்) நிராகரிப்பு செய்து விட்டனரே அவர்கள், இதர (இனபந்து) ஜனங்களை (மடக்கி, நோக்கி) “ஏ ஜனங்களே, இச்சமயம் நீங்கள் எங்களோடு சேராமல், அந்த ஷுஐபுடன்

சேர்த்து கொள்வீர்களேல், சந்தேகமின்றி பெரும் நஷ்டத்துக்கு இலக்காவீர்கள், (ஜாக்கிரதை)" என்று (மிரட்டிக்) கூறினர்கள்.

முடிவாக, எதிர்த்த அந்த ஜனக்கூட்டத்தை யெல்லாம் (கடுமையான) பூகம்ப அதிர்ச்சியானது வந்து அமுக்கிக்கொண்டு விட்டது. (இரவில் தூங்கப்போனவர்கள்) அதிகாலையில் தத்தம் வீடுகளுக்குள் குப்புறக் கவிழ்ந்து மாண்டு மடிந்து காணப்பட்டார்கள். மேலும், (நயவஞ்சகத்தனமாய்) நபி ஷுஐபை எதிர்த்துப் பேசினரே (அவர்களின் கதி யாதாயிற்றெனின்) அவர்கள் அந்த ஊரில் வசித்திருந்தனரோ என்ற அடையாளங்கள் கூட இல்லாது போயினர்.

அத்துடன் (நபி) ஷுஐபும் அ(த்திய)வர்களை விட்டும் (வெகு தூரம்) ஒதுங்கிப் போய்விட்டார். அப்போதவர் (சீரழிந்த) ஜனங்களை நோக்கி "ஏ என் கூட்டத்தினரே, நான் என்னுடைய இறைவனின் செய்தியை உங்களிடம் (சொல்லி) ஒப்படைத்து விட்டேன்; உங்கள் விஷயத்தில் நான் நலவானதையே கோரினேன்; நீங்கள்தான் ஏற்காமல் போய், காபிராகி விட்டீர்கள். அந்தோ! அழிவுற்றீர்கள். (ஸூரா: அல்அஃராப்; ருகூ: 11.)

## மூஸா நபிக்கும் பிர்அவுன் ராஜனுக்கும் நடந்த போராட்டம்

அதன் பிறகு (இறைவனாகிய) யாம், (மன்னன்) பிர்அவுனிடமும் அவனுடைய கௌரவம் மிக்கவர்களிடமும், மூஸாவை, அற்புதங்கள் (முஃஜிஸாக்கள்) அளித்து (சத்தியம் போதிக்கும் நபியாக) அனுப்பி வைத்தோம். (பிர்அவுனுடைய கூட்டத்தாராகிய) அந்த ஜனங்கள், (மூஸா நபி காண்பித்த) அற்புதங்களை ஏளனம் செய்யலானார்கள். (முஸ்லிம்களே!) அப்படிப் பட்டவர்களின் இறுதி கதி யாதாயிற்றென்பதை (சரித்திரச் சம்பவங்களைக் கொண்டு) அறிந்துணர்ந்து பாருங்கள். (அதாவது :—)

அப்போது மூஸா (நபி), பிர்அவுனை நோக்கி கூறலானார்: "ஏ பிர்அவுனே! நான் (எல்லாம் வல்ல) இறைவனுடைய புறத்திலிருந்து ரஸூலாக அனுப்பி வைக்கப்பட்டு வந்திருக்கிறேன். ஆண்டவன் புறத்திலிருந்து சத்தியமான விஷயங்களையே நான் உங்களுக்கு எடுத்தோதுவேன்; இது என் மீதுள்ள கடமை! அத்துடன், உங்கள் (பொது) ஜனங்களுக்குக் காண்பிப்பதற்காக, உங்கள் இறைவனிடமிருந்தே, (பல) அற்புதங்களையும் (முஃஜிஸாக்களாக) கொண்டு வந்திருக்கிறேன். ஆதலின், (தெய்வக் கட்டளைக்கு இணங்கி) நீ, பனீ இஸ்ராயீல் ஜனங்களை (கட்டுப்பாட்டை விட்டும் விடுவித்து) என் சமூகத்துக்கு அனுப்பி வைத்துவிடு. இது என் கோரிக்கை"

என்று (மூஸா நபி) கூறினர். அதைக் கேட்டு (மூர்க்க மன்னனான) பிர்அவுன், "(ஏ மூஸாவே) நீர் அற்புதங்களைக் கொண்டு வந்திருக்கிறீரா? அதனால் நீர் சத்தியமானவரா யிருப்பின், அதனைச் செய்து காட்டிவிடு பார்க்கலாம்" என்று (சபதம்) கூறினன். எனவே, (அதன் பேரில்) மூஸா நபி, தம்முடைய (அஸா என்னும்) கைத்தடியை, அவன்முன் போட்டார்; உடனே அது அப்போது, (பெரியதொரு) மலைப்பாம்பாக மாறியது. (அதுமட்டுமல்ல). மேலும் மூஸா நபி, தம்முடைய இரு கரங்களையும் வெளிப்படுத்தி (நீட்டி)க் காட்டினர்; அப்போது, பார்ப்போர் கண்கள் கூசும்படியான அளவுக்கு பிரகாசம் வீசியது.

இதைக் கண்டு (மருண்ட) பிர்அவுனுடைய சகபாடி(த் தோழர்)கள் "ஓ, இவர் ஒரு மகாப் பெரும் (ஜால வித்தைக் கார) மாயாவியாக இருக்கிறார். ஏ எங்கள் பிர்அவுனே; (மன்னரே) உங்களை, உங்கள் தேச (ராஜ்ய) பாரத்தை விட்டும் விரட்டி விடுவதே இவருடைய (மூஸாவுடைய) நோக்கமாகத் தெரிகிறது. ஆகையினல் இவரை என்ன செய்யலாம் என்று நாமெல்லோரும் கூடி ஆலோசனை செய்ய வேண்டும்" என்று (ஏகோபித்துக்) கூறினர். அதன்படி கூடி (சதி) ஆலோசனை செய்த பின்னர், "மூஸா வுடையவும் அவரது சகோதர ருடையவும் இவ்விவகாரத்தை, ஒரு குறிப்பிட்ட காலம் வரை ஒத்தி வைக்க வேண்டும்; அதுவரை, நாட்டுப் புறங்களிலெல்லாம் உள்ள எல்லாப் பொது (ஜால வித்தைக்கார) மாந்திரீகர்களை, அவருக்கு எதிரிடையாக ஒருங்கே திரட்டி ஏவ வேண்டும்" என தீர்மானம் செய்தனர். இறுதியாய், அதன்படியே எல்லா மந்திரவாதிகளும், (மன்னன்) பிர்அவுனிடம் வந்து கூடினர். அவர்கள் (போட்டிக்கு ஆயத்தமாகி) "சரி, நாங்கள் மூஸாவை (ஜயித்து) மிகைத்து விடுவோமாயின், எங்களுக்குத் தகுதியான (பெரிய) சன்மானம் கிடைக்க வேண்டும்" என்று கோரிக் கொண்டனர். அதன் பிரகாரமே பிர்அவுனும் "சரி, அங்ஙனமே உங்களுக்குரிய சன்மானமும் கிடைக்கும்; மேலும் நீங்கள் அரசாங்கப் பிரதானிகளாகவும் உயர்த்தப் படுவீர்கள்" என்று வாக்களித்தான்.

அப்போது அந்த மந்திரவாதிகள் (சர்வாயத்தமாகி) மூஸா நபியை நோக்கி, "ஏ மூஸாவே, நீவிர் முதலில் உமது (அற்புதக்) கைத் தடியைப் போடுகின்றீரா? அல்லது நாங்கள் போடலாமா?" என்று (பந்தயம்) கேட்டார்கள். அதற்கு மூஸா நபி "சரி, நீங்களே முதலில் போடுங்கள்" என்று சொன்னர். அதற்கிணங்க, அந்த மந்திரவாதிகள் (யாவரும்) தத்தம் (மாந்திரீக) கைத்தடிகளையும் (மாயக்) கயிறுகளையும் (தரையில்) போட்டார்கள். ஜால மந்திர வேகத்தினல், எல்லாம் கண்கட்டு வித்தையாயின; (இதனல் ஏராள

மான) பாம்புகளை அவர்கள் உற்பத்தி செய்து, எல்லோருக்கும் பயங்கரம் உண்டாகும்படியான மாய வித்தை செய்து காட்டினர்கள்.

(இறைவன் திருவுளமாகிறான்:) அப்போது யாம் மூஸாவுக்கு (ஞானேய) வஹீ அனுப்பி வைத்து 'ஏ மூஸாவே, நீவிரும் உமது (அஸா எனும்) கைத்தடியை (போட்டியாக கீழே) போடுவீராக' என்று கட்டளை பிறப்பித்தோம்.'

மூஸாநபி தம்முடைய கைத்தடியை (அந்த மந்திரீகர்களின் பாம்புக் கூட்டத்தின் மீது) போட்டார்; அங்ஙனம் போடவே, அது மகாப்பெரும் மலைப்பாம்பாக மாறி, மந்திரவாதிகளின் (செப்படி வித்தையாலுண்டான) செயற்கை (போலிப்) பாம்புகளை யெல்லாம் விழுங்கத் தொடங்கி விட்டது. அப்புறமென்ன? சத்தியம் எதுவென்று ஸ்திரமாய் விளங்கி விட்டது. மேலும், அந்த மாந்திரீகர்கள் செய்து காட்டிய (வித்தை) யெல்லாம், வீணுகிப் போய் விட்டன. அவர்களெல்லோரும் மூஸா நபியி(ன் முஃஜிஸாவி)னல் ஜயிக்கப்பட்டு, சீரழிந்து போனர்கள். அம்மந்திரவாதிகள் மருண்டு, பணிந்து விழுந்து ஸஜ்தாவும் செய்தனர். மேலும் அவர்கள், மனம் மாறி "ஓ நாங்கள் (பணிகிறோம்;) மூஸாவுடையவும் (அவர் சகோதரர்) ஹாரூனுடையவும் இறைவனுகிய சர்வலோக ரக்ஷகனுகிய அல்லாஹ் மீது (ஈமான் என்னும்) விசுவாசம் கொள்கிறோம்" என்று அறுதியிட்டுக் கூறினர்.

இதைக்கண்டு (கேட்டு சினந்த) பிர்அவுன் (அம்மந்திரவாதிகளை நோக்கி) "நான் உங்களுக்கு இன்னும் வேறு எந்த உத்தரவும் கொடுக்கவில்லை; அதற்குள் நீங்கள் மூஸாவுடைய இரக்ஷகன் மீது விசுவாசம் கொண்டு விட்டீர்கள். அப்படியானல், இதில் ஏதோ பெரிய மோசடி இருக்கிறது; (ஏதோ பழியை) நீங்கள் (என்) நாட்டின் மீதே போட்டு, தேச ஜனங்களை யெல்லாம் இந்த ஊரை விட்டும் விரட்டப் பார்க்கிறீர்களோ? இதன் முடிவு யாதாகிறதென்பதை இப்போதே நீங்கள் அறிந்து கொள்ளத்தான் போகிறீர்கள். இதோ உங்களை நான், வலப்புறமும் இடப்புறமுமாக உங்கள் கால்-கரங்களை வெட்டப் போகிறேன்; அதன் பின் நீங்கள் தூக்கில் ஏற்றப்பட்டு மாளப் போகிறீர்கள்" என்று (கோபித்துக்) கூறினான்.

இதைக்கேட்டு அந்தப் பேர்வழிகள் (அஞ்சாது) "ஏ பிர்அவுனே, நாங்கள் எங்கள் (உண்மையான) இரக்ஷகனின்பால் செல்ல வேண்டியது எங்கள் மீது கடமையாய் விட்டது; இரக்ஷகனுடைய புறத்திலிருந்து எங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்ட (சத்தியமான) அற்புதத்தைக் கண்டு ஈமான் கொண்டதற்காகவா, எங்களோடு நீ விரோதம் பாராட்டுகின்றாய்? (நீ என்ன வேண்டுமானுலும் செய்து கொள்)" என்று கூறி, "ஏ எங்கள் (சத்திய)

இரக்ஷகனே! எங்களுக்குப் பொறுமையையும் சகிப்புத் தன்மையையும் கொடுத்தருள்வாயாக. சத்திய (இஸ்லாம் மார்க்க) நிலையிலேயே எங்கள் ஆவி பிரியும்படிச் செய்வாயாக'' என்று பிரார்த்தனையும் செய்தார்கள்.

(மன்னன்) பிர்அவுனுட னிருந்த மந்திரிப் பிரதானிகள் இந்த முடிவைப் பார்த்து, பிர்அவுனை நோக்கி (மேலும் ஊக்கப் படுத்த) "ஏ எங்கள் (அதிபர்) பிர்அவுனே! இனியும் தாங்கள் மூஸாவையும் அவருடைய கூட்டத்தாரையும்—அவர்கள் மீண்டும் நம் ஊர்களில் போய் அட்டூழியங்கள் புரிந்து திரிவதற்காக விட்டு விடப் போகின்றீரா? அப்படி செய்தால், உங்கள் பிரஜா ஜனங்க ளெல்லோரும் உங்களை விட்டும், உங்கள் சுவாமிகளை விட்டும் மனம் மாறிப் போய் விடுவார்களே'' என்று கூறினார்கள்.

அதைக் கேட்டு பிர்அவுன் (மன்னன்) "(ஹா! அவர்களை யாம் சும்மா விட்டு விடமாட்டோம்); அவர்களுடைய ஆண் பிள்ளைகளை யெல்லாம் (பிடித்துக்) கொன்று போட்டு விடுவோம், அவர்களுடைய பெண்பிள்ளைகளை யெல்லாம் (எம் ஊழியத்திற்காக) உயிரோடு விட்டு வைப்போம். ஏனெனின் (அதிகாரம் பெற்ற) நாமே அவர்கள் மீது ஆதிக்கம் (மிகைப்பு) உடையவர்களா யிருக்கிறோம்'' என்று கூறி வைராக்கியங் கொண்டான்.

அப்போது நபி மூஸா, தம்முடைய (ஈமான் கொண்ட) ஜனங்களை நோக்கி, "பக்தர்களே! நீங்கள் பயப்படாதீர்கள். நீங்கள் (இப்போது எல்லாம் வல்ல) அல்லாஹ்வினிடம் உதவி கோருங்கள். இந்த சத்தியத்தின் மீதே ஸ்திரமாய் இருங்கள். இந்த தேசம் (பூமி) எல்லாம், அல்லாஹ்வுக்கு சொந்தமானதேயாகும். அவ் விறைவன் தன் அடியார்களில் யாருக்கு விரும்புகிறானே அவர்களுக் கெல்லாம், தேசத்தின் அனந்தர பாத்தியதையை அளித்து நியமனம் செய்கின்றான். இதை நிச்சயமாய் நம்புங்கள். பரிசுத்தவான்களின் முடிவு எப்போதும் நன்மையாகவே இருக்கும்'' என்று (ஆறுதல் மொழி) கூறினார்கள். அதைக் கேட்டும் (ஆறுதல் பெறாத) அந்த ஜனங்கள், (நபியை நோக்கி) "ஏ மூஸாவே, தாங்கள் விஜயம் செய்வதற்கு முன்நாளிலும் நாங்கள், பிர்அவுனுடைய (ஆதிக்கத்தில் அவன் கரத்தால்) கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தோம். இப்போது, தாங்கள் விஜயம் செய்த பிறகும் (கஷ்டப்படுகிறோம்)'' என்று பொருமினர். அதற்கு (த் தீர்க்கமாக) மூஸா நபி, "(ஜனங்களே, இனி பயப்பட வேண்டியதில்லை. பிர்அவுனும் அவன் சகாக்களும் அழிய வேண்டிய) அந்தக் காலம் நெருங்கி வந்துவிட்டது; உங்களுடைய இரக்ஷகன் (அல்லாஹ்) கட்டாயம், உங்கள் பகைவனை அழித்தே தீருவான்; மேலும் உங்களை அவனுடைய

நாட்டின் (ராஜ்யாதிகாரத்தின்) மீது (ஆதிக்கம் தந்து) அமர்த்து வான். இதனால் நீங்கள் என்ன விதமான நற்கருமம் புரிகின்றீர்கள் என்பதை கண்டறியப் போகிறான்'' என்று கூறினார்கள்.

(ஸூரத்துல் அஃராப்; ருகூ: 13, 14, 15)


# இஹ்யா உலூமுத்தீன்

மொழி பெயர்ப்பு

(தமிழ்)

இஸ்லாமிய சன்மார்க்க ஞானப் பொக்கிஷமாய் விளங்குவது இமாமுல் மஃரிபத் வத்தரீகத் ஹஜ்றத் இமாம் கஸ்ஸாலி ரஹ்மத் துல்லாஹி அலைஹி அவர்கள் அரபு பாஷையில் இயற்றிய: இஹ்யா உலூமுத்தீன் என்னும் பாரதூரமான கிரந்தம். அது மௌலவி ஆலிம்களுக்கு மதரஸாக்களில் கற்பிக்கப் படுத்துவது யாவரும் அறிந்த விஷயம். அந்த அற்புதமும் மகிமையும் வாய்ந்த இஸ்லாமிய ஞான மார்க்க நூலின் மொழி பெயர்ப்பே இந்த இஹ்யா உலூமுத்தீன் ஆகும். அரபு உர்து தெரியாத தமிழ் முஸ்லிம்களும், இஸ்லாமிய அனுஷ்டானத் தத்துவ ஞானங்களையும், இக்கித்தாபின் வாயிலாய் ஐயமறத் தெரிந்து கொள்ளலாம். இதில் ஷரீஅத், தரீகத், மஃரிபத், ஹகீகத் என்னும் நான்குவித மார்க்கங்களும் விளக்கப்பட்டிருக்கிறது. ஈமான், இஸ்லாம், அகீதா, ஹதீஸ், தலீல் முதலிய ஆதாரங்களோடு, இஸ்லாம் மதானுஷ்ட சட்டதிட்ட பர்லு, ஸுன்னத்து, முஸ்தஹப்பு, மக்ரூஹ், ஹராம் முதலிய மஸ்அலாக்களெல்லாம் இந்நூலின் கண், மிகத் துலாம்பரமாய் விளக்கப்பட்டிருக்கிறது. இதன் பெருமை எழுதிச் சொல்லித் தெரியக் கூடியதில்லை. இந்த நூலினைக் கையில் எடுத்துப் படித்துப் பார்த்தாலே தெரிய வரும்.

நெடு நாட்களுக்குப் பிறகு இந்நூல் அச்சாயிருப்பதால் பிரதிகளுக்கு ஆர்டர் தர முந்திக் கொள்ளுங்கள்.

இதன் விலை ரூ 5.

கிடைக்குமிடம் :—

ஹாஜி எம். ஏ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்,
ஷாஹுல் ஹமீதிய்யா பிரஸ்,
நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

## மஜ்மூஉல் ஸலவாத்து

இப்புத்தகம் அல்லாஹு தஆலாவின் அஸ்மாவுல் ஹுஸ்னுவைப் பொதிந்த துஆகன்ஜுல் அர்ஷும், இன்னும் நபிகள் நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் பேரில் எப்போதும் க்ஷேமமாய் ஓதி வருகிற ஸலவாத்துகளில் மிகவும் புகழானதும், மற்றும் ஸலவாத்துகளுக் கெல்லாம் தாயானதுமான உம்மு ஸலவாத்தும், இன்னும் அல்குத்புர் றப்பானீ வல்கௌதுஸ் ஸமதானீ முஹ்யித்தீன் அப்துல் காதிரில் ஜைலானி றலியல்லாஹு அன்ஹு அவர்கள் பேரில் ஓதப்படும் கவ்திய்யா ஸலவாத்தும், இன்னும் செய்யிதுனா குதுபுல் அக்தாபு வகௌதுல் அஃபாபு ஜிந்தா ஷாஹ் மதார்பதீவுத்தீன் றலியல்லாஹு அன்ஹு அவர்கள் பேரில் ஓதப்படும் மதாரிய்யா ஸலவாத்தும், இன்னும் அநேக சில்லரை ஸலவாத்துகளும் துஆக்களும் ஒருங்கே சேர்ந்த அருமையான கிதாப். சுத்தத் தமிழில் சிறியதாய் பாக்கெட் புத்தகம் போல் கிளேஸ் காகிதத்தில் அழகாய் அச்சிடப் பட்டு கலிகோ பைண்டு செய்யப்பட்டிருக்கிறது.

விலை அணு. 15  ஷை அறபுத் தமிழ் விலை அணு. 15

---

## மஜ்மூஉ மவ்லூது

இதில் றஸூலுல்லாவுடைய மவ்லூதும், அதன் துஆக்களும், அந்த மௌலூதின் வரிசைகளும், ஒவ்வொரு பைத்தின் தலைப்பில் அதற்குள்ள ஸலவாத்துப்பாட்டுகளும், அதபுகளும், இத்துடன் முஹ்யித்தீன் ஆண்டவர்கள் மவ்லூதும், அதன் துஆக்களும், அதன் வரிசைகளும், மீரான் ஸாஹிபு ஆண்டவர்கள் மவ்லூதும், அதன் துஆக்களும், அதன் வரிசைகளும், யாஸெய்யதி, யாகுத்பா, யாஸெய்யதி ஷைகி, மழை பைத்து, பீஹுப்பி ஸைய்யிதினா பைத்து முதலியவைகளும் தமிழால் சுத்தமாய் யெழுதி கிளேஸ் காகிதத்தில் அச்சிடப்பட்டது. கலிகோ பைண்டு செய்யப்பட்டிருக்கிறது.

விலை அணு. 15  ஷை மூன்று மௌலூதுகளும் அறபியில் கிளேஸ்காகிதம் கலிகோ பைண்டு. விலை ரூ. 1—8—0

---

கிடைக்குமிடம் :—

ஹாஜி M. A. ஷாஹுல் ஹமீது & ஸன்ஸ்,

நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதறாஸ் 5.

# மூளை பலத்தால் முன்னேறியவர்.

## 'ஹென்ரி போர்டின்' வரலாறு

(முஹம்மது தாவூது)

(4-வது பகுதி)

முதல் போர்டு கார், நான்கு துவிச்சக்கர வண்டி சக்கரங்கள் மீது அமைக்கப்பட்ட சிறு பெட்டி போன்றது; பின் இருசு மீது சிறு இயந்திரம் பொருத்தப்பட்டிருந்தது. டெட்ராயிட்டிலுள்ள எடிசன் மின்சார விளக்குக் கம்பெனியின் மின் விசை நிலையத்தில் எஞ்சினீராக இருந்த போது ஏழு வருஷ காலம் இரவு வேளைகளில் கஷ்டப்பட்டு அந்த மோட்டார் வண்டியை அவர் செய்து முடித்திருந்தார். நீராவிப் போக்கி 'பம்ப்'பி லிருந்து எடுக்கப்பட்ட எஞ்சின் உருளைகள் ரயில்வே வாஷரி லிருந்து (Washer) எடுக்கப் பட்ட சக்கர சாமான்கள் (Hubs) முதலிய துண்டு, துரும்பு தளவாடங்களைக் கொண்டு அந்த கார் தயாரிக்கப்பட்டது. ஓரிரவு மழை பெய்து கொண்டிருக்கும் போது, லாந்தர் வெளிச்சத்தைக் கொண்டு முதல் தடவையாக அதனை அவர் ஓட்டிச் சென்றார். முன்னேக்கிச் செல்லத்தான் அவரால் முடிந்தது. ஆயினும், அவரது இல்லத்துக்கு அவரை அது கொண்டு போய் விட்டது. அவரது மனைவி ஒரு குடையுடன் அவருக்காக அவள் அப்போது காத்துக் கொண்டிருந்தாள். முதல் போர்டு கார் தயாரிக்கப்பட்ட விதமும் அதில் அவர் செய்த முதல் பிரயாண விவரமும் சுவாரஸ்யமாக இருக்கின்றன.

பட்டப் பகலில் தெருக்களில் அதனை ஓட்டிச் செல்வதற்கு டெட்ராயிட் மேயரிட மிருந்து அவர் "பர்மிட்" பெற்றிருந்தார். சில சமயங்களில் இடை வழியில் எஞ்சின் கோளாறு காரணமாக அது 'மக்கர்' பண்ணும். பழுது பார்த்துத் திரும்பி வருவதற்குள் எவராவது அதில் ஏறிச் சென்று விடலாமென அஞ்சியமையால் வண்டியைச் சங்கிலி போட்டு தெரு விளக்குக் கம்பத்தோடு கட்டி விடுவார்.

புள்ளி விவர இலாக்கா ஏற்படுத்துமாறு எவரோ ஒருவர் அவரைத் தூண்டினர். ஒரு வருடத்துக்குப் பிறகு அந்த இலாக்காவை அவர் ஒழித்துக் கட்டினர். மிகப் பெரிய அலுவலகமாக அது அபிவிருத்தி யடைந்து விட்டது. பெரிய அலுவலகங்கள் எத்தன்மை வாய்ந்தவை என்பது அவருக்குத் தெரியும். அவைகள் புல் போல சீக்கிரம் வளர்ச்சி அடைந்து விடும். ஒன்றை பாதியாகக் குறைத்து விட்டால் ஒரு வருடத்துக்குப் பிறகு அது இரு மடங்கு

பெரிதாகி விடும். அதை கட்டுப்படுத்துவதற்குள்ள ஒரே வழி அதைக் கொன்று விடுவதேயாகும். புள்ளி விவரத் தகவல் பற்றி ஹென்ரி போர்டு கூறியதாவது: புள்ளிவிவர நிபுணர்கள் தரும் புள்ளி விவரக் கணக்கு எழுதப்படு முன்பு அது காலவதியாகி விடுகிறது. எந்த ஒரு விஷயத்தைப் பற்றியாவது பெரும் அளவில் உண்மை விவரங்களை திரட்டுவதற்குள், அவற்றின் மதிப்பு குறைந்து விடுவதால் கடந்த காலச் சின்னமாக அவை க்ஷீணித்து விடுகின்றன; எதிர் காலத்துக்கு அப்புள்ளி விவரங்களை அல்லது தகவல்களை வழிகாட்டியாகக் கொள்வது உபயோக மற்றது, அபாயகரமானதும் கூட.

முன்னேக்கி நடந்து செல்லும் போது அவர் கண்ட தகவல்களையே அவர் மதித்து வந்தாரே யொழிய புள்ளி விவரத் தகவல்களில் அவர் சிறிதும் நம்பிக்கை வைக்கவில்லை. மாடல் "T"க்குப் பிறகு போர்டு தயாரித்த மாடல் "A" உபயோகத்துக்கு வருவதற்குச் சற்று முன்பு நண்ப ரொருவர் அவரிடம் கூறினர்: "நீங்களும் ஜெனரல் மோட்டார் கம்பெனியும் க்ரிஸ்லெர் கம்பெனியும் உங்களால் முடிந்த அளவு அதிகமான அளவில் முறையே போர்டு, செவ்ரொலெட், ப்ளிமௌத் கார்களைத் தயாரித்து மார்க்கெட்டில் கொண்டு வந்து குவிக்கப் போகிறீர்கள். ஆனல், ஒரு வருடத்தில் மார்க்கெட்டில் விற்பனையாகக் கூடிய மொத்தக் கார்களின் எண்ணிக்கை மிகச் சொற்பம். நீங்களும் அவர்களுமாகச் சேர்ந்து வருட விற்பனை அளவை நிர்ணயித்து அதற்கேற்ப உற்பத்தியைக் கட்டுப்படுத்திக் கொள்ளக் கூடாதா?"

"தொழிலில் உள்ள உல்லாசத்தை ஒழித்துக் கட்டிவிட நீங்கள் விரும்புகிறீர்கள் போலும்" என போர்டு குறிப்பிட்டார்.

இதன் பேரில் அந்த நண்பர் சொன்னர்: "மோட்டார் தொழிலில் ஒருவித ஸ்திரத் தன்மை ஏற்படுத்துவது சாத்தியம் என்று தான் நான் நினைக்கிறேன்."

"ஸ்திரத் தன்மையா?" என வினவி, போர்டு மேலும் தெரிவித்தார்: "ஸ்திரத்தன்மை என்பது நீரோடையில் நீரோட்டம் உள்ள திசையில் மிதந்து செல்லும் செத்த மீன் போன்றது. அமெரிக்காவில் எங்களுக்குத் தெரிந்த ஸ்திரத்தன்மை மாறுதல் ஆகும்."

கிராக்கியைவிட உற்பத்தி மிக அதிகமாக இருப்பதால் வேலையில்லாத் திண்டாட்டம் அடிக்கடி ஏற்படும் என்பதை அந்த நண்பர் எடுத்துரைத்தபோது போர்டு பின்வரும் பதில் அளித்தார்: அபரிமித உற்பத்தி என்பது தவருன வார்த்தை. ஒரு சாமான் அபரிமிதமாக உற்பத்தி செய்யப்பட்டு விட்டது என்று நீங்கள் சொல்லும்போது காலம் அல்லது விலையைப் பொறுத்தவரை அது சரியில்லை என்று

தானே நீங்கள் கருதுகிறீர்கள். இந்த விலைக்கும் நீங்கள் அதிக அளவில் இரு சக்கரங்கள் உள்ளதும் ஒரு குதிரையால் இழுக்கப் படுவதுமான இலேசான வண்டியை செய்யமுடியும் என நான் நினைக்கிறேன். ஆனால், காலத்துக்கு அவை ஒவ்வாதவையாக இருக்கும்.

லாபம்சம்பாதிக்க வேண்டுமென்ற எண்ணத்தை அவர் இகழ்ச்சி செய்தார். தொழிலாளர்களுக்கு நல்ல கூலி அளிக்கவேண்டுமென்ற எண்ணத்தைவிட நல்ல லாபம் சம்பர்திக்கவேண்டுமென்ற எண்ணமே முதலாளிகளிடம் வேரூன்றி யிருக்கிறதென்பதை அவர் உணர்ந்தார். எல்லோருக்கும் சரக்குகள் சப்ளை செய்வதற்குப் பதில் சொந்தக்காரர்களுக்கு லாபம் கிடைக்கச் செய்வதையே குறிக்கோளாகக் கொண்ட எந்த தொழிலும் நசிந்து நாசமடையும் என்பது அவரது உறுதியான சித்தாந்தம்.

வேலையை நல்ல விதமாகச் செய்வதால் லாபம் கிடைக்கும். இல்லாவிடில் லாபமே கிடைக்காமற் போய்விடும். தகுந்த முறையில் ஒழுங்கான வகையில் நடத்தப்படும் தொழிலில் லாபம் கிடைக்காமற்போகாது என்பது அவரது நம்பிக்கை. அவர் பின்வரும் கருத்தை வெளியிட்டார். பொதுஜனசேவையையே குறிக்கோளாகக் கொண்ட தொழில், லாபத்தைப்பற்றி ஒரே ஒரு கவலைதான் கொண்டிருக்கும்; திக்குமுக்காகச் செய்யும் அளவுக்கு லாபம் பிரம்மாண்டமானதாகவிருக்கும்.

குரூரமான கட்டிடத்தில் இடம் பெற்றிருந்த அவரது கம்பெனி பிரம்மாண்டமான சாம்ராஜ்யமாக வளர்ச்சி அடைந்துள்ளது. தினம் பத்து கார்களை ஆரம்பத்தில் சில மெக்கானிக்குகள் பூர்த்தி செய்து வந்தனர். இப்போது வருடத்துக்கு இருபது லட்சம் கார்கள் பூர்த்தி செய்யும் திராணி பெற்றுள்ளது. சம்பாத்தியத்தி லிருந்துதான் இத்தகைய அபிவிருத்திகள் ஏற்பட்டுள்ளன. ஆரம்பத்தில் கம்பெனியின் மொத்த மூலதனம் இருபத்து எண்ணாயிரம் டாலர். இத்தொகையை பன்னிரண்டு பேர் அளித்திருந்தனர். இறுதியில், இவர்கள் ஒவ்வொருவரின் பங்குத் தொகைகளையும் போர்டு செலுத்தி விட்டார். ஒரு தடவை கூட கம்பெனிகடன் வாங்க வேண்டிய நிலை அல்லது நிர்ப்பந்தம் ஏற்பட்டதில்லை. ஒவ்வொரு வருடமும் லாபம் கிடைத்து வந்தது. இந்த லாபத்தில் பெரும் பகுதி தொழிலில் முதலீடு செய்யப்பட்டு வியாபாரம் விருத்தி செய்யப்பட்டது. கார் விலை மேலும் குறைவதற்கு இது வசதியாக விருந்தது.

(தொடரும்.)

# நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் குர்ஆனின் நல்லுபதேசமும்

## 1-வது அத்தியாயம்-

அந்தகாரத்திலும் அறியாமையிலும் அமிழ்ந்து அவதியுற்ற அவனியோர்க்கு அறிவுப் பாதையை அறிவுறுத்தும் பொருட்டு அகிலங்கள் அனைத்துக்கும் அதிபதியான அல்லாஹு தஆலாவால் அவனிக்கு அனுப்பப் பெற்றவர்கள் அண்ணல் அஹ்மது நபி (ஸல்) அவர்கள் என்பதற்கு சரித்திரம் சாக்ஷி சொல்கிறது. எனினும், ஏந்தல் முஹம்மது முஸ்தபா ரசூல் (ஸல்) அவர்களுக்கு எழுதப் பெற்றிருப்பதைப் போன்று வேறு எந்த தீர்க்கதரிசிக்கோ அல்லது தீரருக்கோ மிக விரிவாகவும் விளக்கமாகவும் வாழ்க்கை வரலாறு வரையப் பெற்றிருக்கவில்லை.

முஸ்லிம்களுக்கு மட்டுமின்றி முஸ்லி மல்லாதவர்களுக்கும முன்மாதிரியாக அமைந்துள்ள முஹம்மது நபி (ஸல்) அவர்கள் கி. பி. 571-ம் ஆண்டில் மண்ணுலகில் மக்கமா நகரில் அவதரித் தார்கள். உள்நாட்டு விவகாரங்கள் வெளிநாட்டுத் தொடர்பு ஆகிய விஷயங்களில் அவர்களது முற்பிதாக்கள் அரேபிய நாட்டு அதிபதி களாக இருந்து வந்துள்ளனர். விவேகம், வீரம் ஆகியவற்றின் துணை கொண்டு அவர்கள் அரசு புரிந்து வந்திருக்கின்றனர் அரு மைத் தந்தை அப்துல்லா, அண்ணல் அஹ்மது நபி (ஸல்) அவர்கள் அவதரிக்கு முன்பே அல்லாஹ்வினடி சேர்ந்தார்கள். ஆறு வயதுக் குழந்தையாக இருக்கும்போது அன்னை ஆமினாவையும் இழந்தார் கள். அருமைப் பிதாவையும் அன்பு அன்னையையும் இழந்து அனா தையான அண்ணல் நபி (ஸல்) அவர்களை அவர்களது தாத்தா அப்துல் முத்தலிப் நாளொரு மேனியும்பொழுதொரு வண்ணமு மாகப் பேணி போஷித்து வரலானார். அன்பும் அபிமானமும் கொண்ட அப்துல் முத்தலிப் இரண்டு வருடங்களுக்குப் பிறகு இறந்துவிடவே, அவரது மைந்தர் அபூதாலிப் அண்ணல் நபி (ஸல்) அவர்களைப் போஷிக்கும் பொறுப்பேற்றுக் கொண்டார்; தமது சொந்த தனயனைப் போல பாவித்து தனி மதிப்புடன் வளர்த்து வரலானார்.

தனித்திருந்து தவம் செய்யும் பழக்கம் இப்போது நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு ஏற்பட்டது; பிரபஞ்ச சிருஷ்டியின்

இரகசியத்தை அறிந்து கொள்ள வேண்டுமென்ற அவா அவர்களுக்கு உண்டாயிற்று. தமது வயதுக்கொத்தவர்கள் விளையாட்டுகளிலும் விரும்பத்தகாத செயல்களிலும் ஈடுபட்டிருக்கும் வேளையில் அவர்கள் அமைதியான இடம் நாடிச்சென்று சிருஷ்டிகளைப்பற்றிய சிந்தனையில் காலம் கழித்தார்கள். தம்மோடு விளையாட்டுகளில் கலந்து கொள்ளுமாறு சகாக்கள் தூண்டியபோது அவர்கள் அளித்த பதில் இதுதான்: வீண் விளையாட்டுக்களையும் விரும்பத்தகாத செயல்களையும் விட மிகப் புனிதமான, புண்ணியமான காரியத்துக்காக மனிதன் படைக்கப் பெற்றிருக்கிறான். பதின்மூன்று வயதடைந்தபோது ஸிரியா தேசத்துக்கு வாணிப நிமித்தமாகச் சிறிய தந்தை அபூதாலிபோடு அவர்கள் புறப்பட்டார்கள். இப்பிரயாணத்தின் போது நேர்த்தியோடும் கீர்த்தியோடும் நடந்து கொண்டமையால் அவர்களது புகழ் பரவலாயிற்று.

வயது அதிகரிக்க அதிகரிக்க, அவர்களது திறமையையும் நேர்மையையும் கண்டு மற்ற பெரிய வியாபாரிகளும் அவர்களைத் தமது ஏஜெண்டாக ஏற்றுக்கொண்டு வெளிநாடுகளுக்கு அனுப்பி வைத்தார்கள். பெரும் தனவந்தர்களின் சார்பில் மேற்கொண்ட வர்த்தகப் பிரயாணங்களின்போது அரேபியாவின் பல்வேறு பாகங்களிலும் நடைபெற்ற திருவிழாக்களில் கலந்து கொண்டு பிரபல கவிஞர்களின் கவிதைகளையும் பல்வேறு மதபிரமுகர்களின் மார்க்கோபந்நியாசங்களையும் கேட்டுப் பரவசமும் பயனும் அடையும் பாக்கியம் அவர்களுக்குக் கிடைத்தது. பல்வேறு துறைகளிலும் இவ்வாறு கிடைக்கப் பெற்ற அறிவு, அனுபவத்தின் மூலம் விக்கிரக ஆராதனை, விரும்பத்தகாத மூட பழக்க வழக்கங்கள், வீண் விளையாட்டுகள் ஆகியவற்றால் ஏற்படும் இழிவையும் இன்னல்களையும் அவர்கள் உணர்ந்து கொண்டார்கள்.

இருபத்தைந்து வயதடையும் வரை, முஹம்மது நபி (ஸல்) அவர்கள் வியாபார நிமித்தமாக வர்த்தகக் கூட்டத்தாரோடு வெளி தேசங்களுக்குச் சென்று வந்தார்கள். இத்தருணத்தில் நகர பிரபலஸ்த ரொருவர் இறந்துவிடவே, அவரது விதவை மனைவி கதீஜா அம்மையார்க்கு வியாபாரத்தைக் கவனித்துக் கொள்ள தகுந்த ஆள் தேவைப்பட்டது. இக்காரியத்துக்குத் தகுதியும் தகைமையும் வாய்ந்த த்னிப்பெரும் மனிதர் என முஹம்மது (ஸல்) அவர்கள் சிபாரிஷ் செய்யப்படவே, அந்த அம்மையாரும் அவர்களை அமர்த்திக் கொண்டார். கணவனை யிழந்த அக்காரிகையின் காரியஸ்தராகப் பொறுப்பேற்று மூன்று ஆண்டு காலம் வரை திமஷ்க் முதலிய நகரங்களுக்குச் சென்று வியாபாரத்தை விருத்தி செய்தார்கள். இளைஞரின் இனிய சுபாவத்தாலும் சாதுரிய சாமர்த்

தியங்களாலும் சாதனைகளாலும் கவரப்பட்ட கதீஜா அம்மையார், அவர்களை மணம் புரிந்து கொள்ள முன் வந்தார்.

திருமண சமயத்தின் போது முஹம்மது (ஸல்) அவர்களுக்கு வயது 25; கதீஜா (ரலி) அவர்களுக்கு வயது 40. வயதுப் பொருத்தம் இல்லா விட்டாலும் தம்பதிகளின் தாம்பத்ய வாழ்வு தன்னிகரற்றதாக விளங்கியது. அழகிற் சிறந்த அந்த அம்மையாரின் ஜீவிய காலம் வரை அதாவது மணமாகி இருபத்து ஐந்து ஆண்டுகள் கழியும் வரை—வேறு எந்த கட்டழகியையும் கண்ணெடுத்துப் பாரா மல் இலட்சிய கணவராகவும் தந்தையாகவும் முஹம்மது (ஸல்) அவர்கள் திகழ்ந்தார்கள். அக்காலத்தில் பலதார மணப் பழக்கம் இருந்து வந்த போதிலும் ஏந்தல் முஹம்மது (ஸல்) அவர்கள் 'ஏக பத்தினி விரதம்' அனுஷ்டித்து வந்தார்கள் என்பது இங்கு குறிப் பிடத்தக்கது. அடுத்த பதினைந்து ஆண்டுகளை அண்ணல் அவர்கள் அல்லாஹ்வைப் பற்றிய சிந்தனையிலும் தியானத்திலும் கழித்தார் கள். ஹிரா மலைக் குகையில் தனித்திருந்து விழித்திருந்து பசித் திருந்து பாருலகினர்க்குப் பகுத்தறிவுப் பாதையைக் காட்டுமாறு பரம தயாளனுன பரம்பொருளை வேண்டினார்கள்.

நாற்பது வயதடைந்ததும் ஒரு நாள் அண்ணல் அஹ்மது நபி (ஸல்) அவர்களுக்கு நுபுவ்வத் (நபித்துவம்) கிடைத்தது; மலக்கு ஜிப்ரயீல் (அலை) அவர்கள் மூலமாக அவர்களுக்கு அல்லாஹ் வேத ஞான வெளிப்பாட்டை அருளினான். 'இக்ரஃ' (ஓதுக) என்ற கட்டளை பிறந்த போது, உம்மி (எழுத்தறி வில்லாதவர்) ஆக இருந்த காரணத்தால் தயங்கினார்கள். "எனக்கு ஓதத் தெரியாது" என ஜிப்ரயீல் (அலை) அவர்களிடம் அல்லாஹ்வின் அடியாரும் அவனது அருமைத் தூதருமான அஹ்மது நபி (ஸல்) அவர்கள் பகர்ந்தார்கள். 'இக்ரஃ' பிஸ்மி ரப்பி கல்லதீ கலக்-கலக்கல் இன்ஸான மின் அலக்' (சிருஷ்டி கர்த்தாவான அல்லாஹ்வின் திருநாமத்தால் ஓதுவீராக-அவன் தான் மனிதனை உதிரக் கட்டியி லிருந்து படைத் தான்) என்ற உத்திரவு வெளியாயிற்று. அல்லாஹ்வின் அருளால் அஹ்மது நபி (ஸல்) அவர்களின் அறிவு துலங்கிற்று; இருதயம் விசால மடைந்தது. புதுப் பொறுப்புச் சுமையைத் தாங்க இயலாத வர்களாய் பரபரப்போடு பாலைவனப் பக்கம் சென்ற போது எல்லா திசைகளிலு மிருந்து எதிரொலித்த குரல்—அசரீரி இது தான்: 'ஓ, முஹம்மதே! மிகவும் உயர்ந்தவனாகிய அல்லாஹ்வின் தூதர் நீங்கள். நான் மலக்கு ஜிப்ரயீல்.'

மனச் சுமையுடன் மனைவியிடம் முஹம்மது நபி (ஸல்) அவர்கள் விரைந்தார்கள். போர்வை கொண்டு போர்த்துமாறு அவர்கள் கேட்டுக் கொண்டார்கள். சிறிது நேரம் கழித்து இறைவ

னின் திருவுளச் சித்தத்தை அவர்கள் எடுத்துரைத்தார்கள். அவர்கள் கூறியதை அப்படியே நம்புவதற்கு அம்மாதரசி சிறிதும் தயங்கவில்லை. இரக்க சிந்தையும் இனிய சுபாவமுமுள்ள இலட்சிய புருடராக முஹம்மது நபி (ஸல்) அவர்கள் திகழ்ந்தமையால் இதில் விந்தையோ அல்லது வியப்போ இல்லை. அழியாத அன்பு, ஒப்புயர்வற்ற ஒழுக்கம் ஆகியவற்றின் மூலம் மனைவியுடன் மாண்புறும் வகையில் அவர்கள் இனிது இல்லறம் நடத்தி வந்தார்கள். உண்மைக்கு உறைவிடமான உத்தமராக திகழ்ந்த காரணத்தால் அரேபியர்கள் அனைவரும் அவர்களுக்கு 'அல் அமீன்' (நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்) என்ற பட்டத்தை அளித்திருந்தார்கள். எனவே, 'நுபுவ்வத்' கிடைத்திருக்கிறது என்று அவர்கள் எடுத்துரைத்த போது அந்த எழிலரசி எவ்வாறு நம்பாதிருக்க முடியும்? எனவே, இறைவனது திருவுளச் சித்தத்தின் உண்மை வெளிப்பாடு என்று அவர்கள் கருதினர்கள்.

அடுத்தபடியாக அல்லாஹ்வின் தூதர் போதித்த புது மதத்தை அவர்களது அரபு அடிமை ஜைது (ரலி) அவர்களுடைய சிறிய தந்தையின் தவப்புதல்வர் அலீ இப்னு அபீதாலிப் (ரலி) ஆகியோர் தழுவினர்கள். பின்னர், செல்வமும் செல்வாக்கும் படைத்த செம்மல் அபூபக்கர் (ரலி) முஸ்லிமானர்கள். அவர்களது உன்னத உதாரணம், உபதேசம் மூலமாக மக்கமா நகரின் மற்ற பிரபலஸ்தர்களும் இஸ்லாத்தில் சேர்ந்தார்கள்.

ஆரம்ப காலத்தில் இறை மதமாம் இஸ்லாத்தைத் தழுவியவர்கள், அல்லாஹ்வின் தூதருடைய குடும்பத்தினரும், அவர்களது அத்தியந்த நண்பர்களுமேயாவர். அல்லாஹ்வின் தூதருடைய தூய்மையான, எளிமையுள்ள வாழ்க்கைக்கும், அவர்களது உண்மைக்கும் இது ஒரு எடுத்துக் காட்டு. அவர்களுடைய சொல்லும் செயலும் வாக்கும் வாழ்வும் ஒன்றுபட்டு இருந்தது என்பதற்கு இது ஒரு சான்று.

ஆனல் இந்த ஆரம்ப வெற்றிக்குப் பின், தடையும் ஏற்படத்தான் செய்தது. தங்கள் கோத்திரத்தின் பிரபலஸ்தர்களை விருந்துக் கழைத்து, இறைவனின் இன்னருளால் இஸ்லாம் எனும் சாந்தி மார்க்கத்தைக் கொண்டு வந்திருப்பதாக அல்லாஹ்வின் தூதர் சொன்னதும் அத்தலைவர்களால் அந்த அறிவிப்பை நம்ப முடியவில்லை. 'லாயிலாஹ இல்லல்லாஹ் முஹம்மதுர் ரசூலுல்லாஹ்' (வணக்கத்துக்கு உரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாரும் இல்லை; முஹம்மது (ஸல்) அவனது தூதர் ஆகும்) என்ற கலிமா-இஸ்லாம் என்னும் பொக்கிஷப் பெட்டகத்தின் திறவு கோலை-வற்புறுத்துவதோடு நில்லாமல் விக்கிரக ஆராதனைக்குப் புதைக்குழி

தோண்டி, நாயனின் நண்பர் ஹஸ்ரத் இப்ராஹீம் கலீலுல்லாஹ் (அலை) அவர்கள் போதித்த மார்க்கத்தை நிலை நிறுத்தப் போவதாக ஹஸ்ரத் முஹம்மது நபி (ஸல்) அவர்கள் அறிவித்ததும் அந்த தலைவர்களின் தலைகள் சுழன்றன; கண்கள் கனல் கக்கின. எல்லா திசைகளிலும் எதிர்ப்பு எதிர்பட்டது. எதிரிகளுடன் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தந்தை வழி உறவினர்களும்கூட சேர்ந்து கொண்டனர். அபூ தாலிப் முஸ்லிமாகா விட்டாலும், ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களுக்குப் பாதுகாப்பு அளித்து வந்தார்.

அடுத்த சில வருடங்களில் அல்லாஹ்வின் தூதர் அடக்கு முறைக்கும் தாஷணைக்கும் ஆளாக வேண்டியிருந்தது. அவர்களது சிஷ்யர்களும்கூட துன்புறுத்தப் பட்டனர். புது மதப் பிரசாரத்தைக் கைவிடும் பட்சம், செல்வமும் தலைமைப் பதவியும் தருவதாக அறிவிலி அரேபியர்கள் ஆசை காட்டினர். இந்த தருணத்தில்தான் குர்ஆன் ஷரீபின் 41-வது ஸூரா அருளப் பெற்றது.

அல்லாஹ்வின் அருள்பெற்ற தூதர் என்பதை நிரூபிப்பதற்காக அல்லாஹ்விடமிருந்து அத்தாக்ஷிகள்-அற்புதங்கள் காட்டுமாறு எதிரிகள் வினவினார்கள். 'உண்மையை உபதேசிப்பதற்காக உலகிற்கு அனுப்பப்பட்டேனே யன்றி அற்புதங்கள் நிகழ்த்துவதற்காக அவனிக்கு வரவில்லை' என்று ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்கள் பதிலிறுத்தார்கள். நயமான நடையிலும் பொருளாழத்திலும் குர்ஆன் ஷரீபைப் போன்ற ஒரு நூலைக் கொண்டு வருமாறு எதிரிகளை ஏந்தல் நபி (ஸல்) எதிர் கூவி யழைத்தார்கள். உண்மையை உரைக்குமிடத்து, பகுத்தறிவும் வாக்கு வன்மையுமே அவர்களது கேடயமாக விளங்கிற்று; அல்லாஹ்வின்மீது அபிமானமும் மார்க்கப் பற்றும் அவர்களது தலைக்கவசமாகத் திகழ்ந்தது. மகான் மஹ்மூது நபி (ஸல்) யின் வாழ்விலும்-செயலிலும் சொல்லிலும்-மார்க்கப் பற்று பிரதிபலித்தது.

ஏந்தல் நபி (ஸல்) அவர்களுக்கு எல்லாத் திசைகளிலும் எதிரிகள் ஏராளமாக ஏற்பட்டிருப்பதை எண்ணி ஏங்கியவராய், அபூதாலிப் அவர்கள் ஹஸ்ரத் முஹம்மது நபி (ஸல்) அவர்களை அழைத்து அவர்களது புது முயற்சியை-புது மார்க்கத்தை நிலை நிறுத்த வேண்டுமென்ற பிரயத்தை-கைவிடுமாறு உபதேசித்தார். அண்ணல் அஹ்மது நபி (ஸல்) அவர்கள் அளித்த பதில் இதுதான்: 'சூரியனும் சந்திரனும் என்னை எதிர்த்து நிற்குமாறு குரைஷியர் செய்த போதிலும் எனது தீர்மானத்தினின்று நான் பிறழ மாட்டேன்'.

எதிர்ப்பைக்கண்டு எள்ளளவும் அசையாமல் மீண்டுமொருமுறை சில பிரமுகர்களை அல்லாஹ்வின் தூதர் விருந்துக்கழைத்தார்கள். சிற்றுண்டிக்குப் பிறகு தங்கள் புனித அலுவலை எடுத்துரைத்து, புது மார்க்கத்தில் புகுமாறு அவர்களுக்கு வேண்டுகோள் விடுத்தார்கள். தமது பிரசித்திப்பெற்ற பிரசங்கத்தின் இறுதியில் இந்த வினவை விடுத்தார்கள்! "இந்த சுமையைத் தாங்குவதில் எனக்கு எவர் உதவி புரிய வருகிறீர்கள் ?" பிரமையும் பிரமிப்பும் அடைந்தவர்களாய் அப்பிரபலஸ்தர்கள் அமர்ந்திருந்தபோது இளஞ்சிறுவர் அலி (ரலி) எழுந்திருந்து "ஓ நபிகள் நாயகமே! இங்கு பிரசன்னமாக விருப்பவர்களில் இளையவனாக இருந்தாலும் அப்பொறுப்பை நான் ஏற்கிறேன்" என்று இயம்பினார்கள். இந்த வார்த்தைகளைக் கேட்டதும், அல்லாஹ்வின் தூதர் அவர்கள், இளைஞரை இறுகத்தழுவி ஆனந்தக் கண்ணீர் சொரிந்தார்கள்.

மக்கமா நகரில் பகிரங்கமாக இஸ்லாமிய பிரசாரம் துவக்கப்பட்டபோது, முஸ்லிம்களின் தொகை அதிகரிக்கலாயிற்று. இச்சமயத்தில்தான் ஹஸ்ரத் உமர் (ரலி) இஸ்லாத்தைத் தழுவினார்கள். நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை நமனுலகிற்கு அனுப்புவதென்ற சங்கற்பத்துடன் கரத்திலே உருவிய வாளேந்தி வந்து கொண்டிருந்த ஹஸ்ரத் உமர் இப்னுகத்தாப் (ரலி) வழியில் தமது சகோதரி முஸ்லிமாகி விட்டிருப்பதைக் கேள்வியுற்று கண்கள் கனல் கக்க சகோதரியின் இல்லத்திற்குச் சென்று அப்பெண்ணரசியை நையப் புடைத்தார்கள். அம் மாது இரத்தம் சிந்த அழுது கொண்டிருப்பதைப் பார்த்ததும்தான் அவர்களுக்கு மனமுருகியது. தமது செயல் குறித்து வெட்கமும் வெறுப்பும் கொண்டு குர்ஆன் ஷரீபிலிருந்து சில வசனங்களை ஓதிக்காட்டுமாறு சகோதரியைக் கேட்டுக் கொண்டார்கள். சில ஆயத்துகள் ஓதக்கேட்டதும், அவை அல்லாஹ்வின் வசனங்களே யன்றி வேறாக இருக்கமுடியாது என்ற முடிவுக்கு வந்து, முஸ்லிமானார்கள்.

உற்சாகத்தோடும் உத்வேகத்தோடும் உத்தம நபி (ஸல்) மதப் பிரசாரம் செய்து வருவதையும் முஸ்லிம்களின் எண்ணிக்கை ஸ்திரமாக அதிகரித்து வருவதையும் கண்ட குரைஷிக்குப்பார்கள் பலாத்காரப் பிரயோகத்தில் ஈடுபட்டார்கள்: முஸ்லிம்கள் கொடுமைப் படுத்தப்பட்டார்கள். எனவே, நண்பர்களின்றி நலிந்துருகும், உற்றார் உறவினரின் உதவியின்றி உருகும் தமது சிஷ்யர்களை அபிஸினியாவில் அடைக்கலம் புகுமாறு அல்லாஹ்வின் தூதர் அனுமதி அளித்தார்கள். எண்பது ஆடவர், பெண்டிர், குழந்தைகள் கொண்ட அகதிக் கோஷ்டியை அந்நாட்டு மன்னர் மாண்புடன் வரவேற்றுப் பாதுகாப்பு அளித்தார். அந்த அகதிகளைத் தம் வசம் ஒப்புவிக்க

வேண்டுமென்ற குரைஷிகளின் வேண்டுகோளையும் அம்மன்னர் கிராகரித்துவிட்டார். அரபு சரித்திராசிரியர்களின் கூற்றுப்படி அவர் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார். (தொடரும்)


## முதல்லல் கோஷா நாமா

(புதிய பதிப்பு)

கோஷா பர்தா விஷயத்தைப் பற்றி ஹக் தஆலாவின் கலாமாகிய தலீல்களிலும் நமது நபி நாயகமவர்களின் திருமொழியாகிய ஹதீதுகளிலும் வந்திருப்பவைகளைக் கல்விக் கடல்களாகிய முஹத்திஸின்களும், முபஸ்ஸிரீன்களும், முஜ்தஹிதீன்களும் தெண்டித்து விபரித்தெழுதி யிருப்பவைகளில் சிலதை சுருக்கமாக சேகரித்தெழுதி முதல்லல் கோஷா நாமா வென்று பெயர் வைத்து தற்கால ஆலிம் மவ்லவிகளில் மஹான்களாகிய பத்து உலமாக்கள் பார்வை யிட்டு அச்சிடப் பட்டது. இவைகளெல்லாம் வசனமாகக் கூறப்பட்டு இருக்கின்றன.

பின்பு இவைகளெல்லாம் சுலபமாக மனதில் வைத்துக் கொள்ளும் பொருட்டு பாடல்களாக போடப்பட்டு இருக்கின்றன.

இதன் விலை அணா. 8

ஷை அறபுத் தமிழ் விலை அணா. 12

## வின்ஸ்டன் சர்ச்சில்

சென்ற மஹா யுத்தத்தில் பிரிட்டன் பிரதமராக யிருந்து, பிரிட்டன் சரித்திரத்திலேயே மிக நெருக்கடியான ஒரு சமயத்தில் தலைமை வகித்து வந்த வின்ஸ்டன் சர்ச்சிலின் சரித்திரச் சுருக்கம்.

இதன் விலை அணா. 8

கிடைக்குமிடம் :—

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்,
ஷாஹுல் ஹமீதிய்யா பிரஸ்,
கெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.




# நாடோடி இளவரசன்

(டி. எப். ஆர். மஆலி சாஹிப்)

குராஸான் என்ற தேசத்தில், குல்ஷா என்ற ஒரு வாலிபன் இருந்தான். அவன் அழகில் சிறந்தவனாகவும் குணத்தில் நல்லவனாக வும்இருந்தான். ஆனால் அவன் பரம ஏழை; அவன் பெற்றோர், அவனுக்காக சொத்து ஏதும் தேடிவைக்கவில்லை. எனவே, அவன், பக்தாத் நகரம் சென்று, மதக் கல்வியும் உலகக் கல்வியும் படித்து கெட்டிக்காரனானான்.

அழகும் படிப்பும் இருந்து என்ன பயன்! ஜீவனாம்சத்துக்கு ஏதேனும் வழிதேடி யாகவேண்டு மல்லவா? எனவே படித்த புத்தகங்களை யெல்லாம் தன் ஊரில் தன் வீட்டில் கொண்டுவந்து வைத்து விட்டு, ஏதேனும் வேலை செய்து வயிறு பிழைப்போம் என்று ஊரைவிட்டுப் புறப்பட்டுவிட்டான்.

குல்ஷா எங்கெங்கோ சுற்றியலைந்தான்; பலநாள் பல இடங்களுக்கு நாடோடியாக சுற்றி அலைந்துவிட்டு ஒரு நாள், வெகுதூரத்தில் பரிஸ்தான் என்ற ஒரு சிறு ராஜ்யத்தின் தலை நகரில் போய்ச் சேர்ந்தான்! அந்நகரில் அவன் போய்ச் சேர்ந்த நேரம் இருட்டிவிட்டது. எனவே, ஓர் இடத்தில் மட்டும் வெளிச்சமாய் இருந்தது; அது ராஜ மாளிகை. அதன் அருகில்போய் நின்றான்.

அப்போது ராஜா, மாளிகையில் வந்து எட்டிப் பார்த்தான். யாரோ ஒரு வாலிபன், தன் அரண்மனை பக்கத்தில் ஒண்டி நிற்பதைக் கண்டு, "யாரப்பா நீ! என்ன வேண்டும்?" என்று கேட்டான் அரசன்!

அதற்கு நாடோடி குல்ஷா "அரசே! நான் ஒரு நாடோடி! இவ்வூருக்குப் புதிதாய் வந்திருக்கிறேன். இங்கு அறிமுகமானவர் எனக்கு யாருமில்லை; இன்றிரவுமட்டும், தங்கள் அரண்மனையில் ஓரிடத்தில் தங்க இடம் கொடுங்கள். நாளைக்கு நான் எங்கேனும் போய்விடுகிறேன்" என்று கேட்டுக் கொண்டான்.

18/61

புதிய இரண்டாம் பதிப்பு வெளிவந்து விட்டது!

# நபி நாயகத்தின் ஜீவிய சரித்திரம்

இந்த புஸ்தகத்தில் முதலில் அரேபியாவும் அதன் பூர்வீக நிலைமையும், கஅபா ஷரீபின் ஸ்தாபனம், விக்கிரக ஆராதனை, நபி நாயகம் (ஸல்) அவர்களின் பாட்டன்மார்களின் விசேஷ வரலாறுகள், அப்துல் முத்தலிப் சொர்ப்பனங் கண்டு ஜம்ஜம் கிணற்றை தோண்டினது, அப்துல்லாவைக் குறுபான் செய்தது, அப்துல் முத்தலிப் அவர்களின் சொர்ப்பனம், நபி நாயகம் (ஸல்) அவர்களின் தலைமுறைத் தோற்றம், அப்துல்லாவுக்கும் ஆமினாவுக்கும் திருமணம் ஆகிய இந்த ஒவ்வொரு தலைப்புக்கும் கீழ் ஒவ்வொரு பெரிய அத்தியாயமாக எழுதியிருக்கிறது.

பிறகு நபி நாயகத்தின் வரலாற்றை மூன்று பெரிய காண்டங்களாக பிரித்து கூறப்பட்டிருக்கிறது. அவை: (1) விலாதத்துக் காண்டம், (2) நுபுவ்வத்துக் காண்டம், (3) ஹிஜூரத்துக் காண்டம்.

8½ அங்குலம் நீளம், 5½ அங்குலம் அகலமுள்ள புஸ்தகத்தில் 1008 பக்கங்களில் அச்சிட்டு கேர்த்தியான கலிகோ பைண்டு செய்திருக்கிறது. இதன் விலை ரூ. 8—0—0

# மஜ்மூஅ முனாஜாத்

சுத்த தமிழ்

(இரண்டாம் பதிப்பு)

இந்த புஸ்தகத்தில் ஹக்கு பேரில் முனாஜாத்து, யாஸையிதி மாலை, யாகுத்பா மாலை, தலை பாத்திஹா, ஸலவாத்துப் பாட்டு, முத்துமணி மாலை, பக்தி ஆனந்த பாத்தி முத்து மாலை, முஹியித்தீன் முனாஜாத், காஜா பந்தே நவாஸ் முனாஜாத், சரசுவதி மாலை, காஸீம் புலவர் இன்னிசை, கலியாண வாழ்த்துப் பதங்கள் ஆகிய இவைகள் சேர்ந்திருக்கின்றன. இதன் விலை அணா 8

---

கிடைக்குமிடம் :—

ஹாஜி M. A. ஷாஹூல் ஹமீது & ஸன்ஸ்,

நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

பரிஸ்தான் ராஜாவுக்கு அந்த அழகிய வாலிபனிடம் அன்பு உண்டாய்விட்டது. அவனது அழகையும் குணத்தையும் புத்திசாலித்தனத்தையும்கண்டு ஆச்சரியப் பட்டான். எனவே உள்ளே அழைத்து, குல்ஷாவை ராஜாங்க விருந்தாளிபோல் வைத்து உபசரித்தான். நல்லஉணவும் கொடுத்து, தூங்குவதற்கு ஒரு சயன அறையும் ஒதுக்கித்தந்தான்.

இதையெல்லாம், அந்த ராஜாவின் மனைவியான ராணியும் பார்த்துக் கொண்டிருந்தாள். "ஆஹா! இவ்வளவு அழகும் குணமும் அறிவும் பொருந்திய வாலிபன், ஏழையாக இருப்பது ஆச்சரியமாய் இருக்கிறதே" என்று வியந்தாள் அந்தராணி.

எனவே ராணி, ராஜனை அணுகி, "அந்த அழகான வாலிபனை கவனித்தீர்களா? அவன் எளிய ஏழை உடை அணிந்து கொண்டிருந்தாலும், அவன் முகத்தில் ராஜ கம்பீரம் காணப்படுகிறதே. எனவே அவன்மீது சந்தேகம் ஏற்படுகிறது. ஏதோ ஒரு தேசத்து ராஜகுமாரன்தான் இப்படி நாடோடிபோல் மாறுவேடம் பூண்டு தேசாந்திரியாய் ஊர் சுற்ற கிளம்பி விட்டான் போல் தெரிகிறது. தாங்கள் இவன் விஷயத்தில் சற்று சிரத்தை எடுத்து 'இவன் யார்! உண்மையில் இவன் ஏழையா? ராஜகுமாரனா?' என்று கண்டுபிடியுங்கள்" என்று வற்புறுத்திக் கேட்டுக்கொண்டாள்.

அந்த ராணிக்கு மனதில் ஒரு ஆசை: தன்னுடைய குமாரிக்கு இப்படிப்பட்ட அழகான நல்ல வாலிபனே புருஷனாக அமைய வேண்டும் என்று ஆசைப்பட்டாள். ஆகையால்தான் ராஜனிடம் சொன்னாள்.

ராஜாவுக்கு அந்த விஷயம் அவசியமென்று தோன்றியது. தன் மகளுக்கு இப்படிப்பட்டவன்தான் இளவரசனாக அமையவேண்டுமென்று அவனுக்கும் ஓர் எண்ணம் உண்டாயிற்று.

"இங்ஙனம் மாறுவேஷம் அணிந்துகொண்டு தேசாந்திரியாகத் திரியும் வாலிபன், நாம் கேட்டால் உண்மையைச் சொல்லிவிடப் போகிறானா? சொல்லமாட்டான். தான் ராஜகுமாரன் என்பதை ஒப்புக் கொள்ளமாட்டான். ஆகவே, இவன் தனிமையில் இருக்கும் போது, என்ன செய்கிறான், எப்படி நடந்து கொள்கிறான் என்பதை கண்டறியச் செய்துதான், இவன் நாடோடியா? ராஜகுமாரனா என்று தீமானிக்க வேண்டு" மென்று முடிவு செய்தான்.

மறுநாள் காலை, இராஜன் தன் மந்திரியை அழைத்து "அமைச்சரே! என் அரண்மனையில் என் விருந்தினனாய் இரவில் தங்கியிருந்த வாலிபன், ராஜகுமாரனா இல்லையா என்பதை, மிக உபாயமாய்

அவனுக்குத் தெரியாமல் கண்டறிய வேண்டும்'' என்று கட்டளை யிட்டான்.

அதற்கு மந்திரி, ''அரசரே! இந்த உண்மையை அறிய இரண்டொரு நாளாவது பிடிக்கும். தாங்கள், அந்த வாலிபனை அழைத்து இன்னும் சில நாள், அரண்மனையிலே, ராஜ விருந்தினராக தங்கியிருந்து போகும்படி கேட்டுக்கொள்ளுங்கள். அதற்குள் நான் ஆள் வைத்து ஆராய்ந்து, கண்டுபிடித்து விடுகிறேன்'' என்று பதில் சொன்னான்.

அன்று அரசன், அந்த நாடோடி குல்ஷாவை தன்னுடன் உணவருந்த அழைத்து, சாப்பிட்டுக்கொண்டிருக்கும்போது சொல்லலானான்:—''வாலிபரே! நீர் அவசரப்பட்டு இன்றே போய்விட வேண்டாம். நாளை மறுதினம், என் குமாரி ஷஹர்ஜாதிக்கு ஆண்டு விழா கொண்டாடப் போகிறோம். அந்த வைபவத்திற்கு நீர் வந்து இருந்து விட்டுப் போகவேண்டும்'' என்று வேண்டினான்.

அதற்கு நாடோடி குல்ஷாவும் இணங்கினான். அரசரும், மந்திரி பிரதானிகளும் தன்னிடம் இவ்வளவு பிரியமாய் நடந்துகொள்வது அவனுக்கு ஆச்சரியமா யிருந்தது.

வாலிபன், இளவரசனா ஏழைப் பிரஜையா என்பதைக் கண்டறிவதற்காக, மந்திரி ஒரு தந்திரம் செய்தான். அதாவது அன்றிரவு குல்ஷா படுத்துக் கொள்வதற்காக கட்டில் மீது பஞ்சணை மெத்தை விரிக்காமல், சாதாரணமாக ஒரு கம்ளியை மட்டும் போட்டு வைத்தான். வாலிபன், அந்தப் படுக்கையில் சுகமாகத் தூங்குகிறானா? நன்றாய் தூங்காமல் சிரமப்படுகிறானா? என்பதை கண்டறிவதற்காக, தன்னுடைய நம்பிக்கையான அதிகாரி ஒருவனையும் நியமித்துக் கட்டளை யிட்டான் மந்திரி.

அதன்படியே ஏற்பாடுகள் நடந்திருந்தன. இரவில் சாப்பாடு முடிந்ததும், வாலிபன் தனக்கு ஒதுக்கித் தரப்பட்டிருந்த அறையுள் போய் கட்டிலில் படுப்பதற்காக பிரயத்தனப்பட்டான். இவன் என்னென்ன செய்கிறான் என்பதை, அதிகாரி மறைந்திருந்து, ஒரு துவாரம் வழியாய் கவனித்துக் கொண்டிருந்தான்.

வாலிபன், அறைக்கதவை மூடிக்கொண்டு, படுப்பதற்காக தன்னுடைய மேலங்கியை கழற்றினான்; அப்போது மேலங்கியில் ஜேபியில் வைத்திருந்த கடலைப் பட்டாணி கவிழ்ந்து படுக்கை மீதெல்லாம் சிந்திச் சிதறி விட்டது. உடனே அவன், படுக்கையை எடுத்து தட்டி உதறி கடலைப் பட்டாணியை யெல்லாம் பொறுக்கி எடுத்து வைத்துக் கொண்டு படுக்கையில் படுத்தான். சரிவர பொறுக்கி எடுக்காததால்

சில பட்டாணிகள் படுக்கையில் கிடந்து அவன் முதுகில் உறுய்ந்து தூக்கம் கெட்டது; எனவே, எழுந்து படுக்கையைத் தட்டித் துடைத்து விட்டு மீண்டும் படுத்துக் கொண்டான்; இன்னும் சில கடலைகள் சிந்திக் கிடந்ததால், மீண்டுமொரு முறை எழுந்து படுக்கையை சுத்தப்படுத்தி படுத்துக் கொண்டான்.

இதையெல்லாம் மறைந்து கவனித்துக் கொண்டிருந்த அதிகாரி, மறுநாள் காலை, மந்திரியினிடம் சென்று "அமைச்சரே! படுக்கைக்கு நல்ல விரிப்பு இல்லாததால் இரவெல்லாம் அந்த வாலிபர் தூக்கமின்றி, படுக்கையை தட்டித் துடைத்து போட்டு, சிரமப் பட்டுக் கொண்டிருந்தார்" என்று அவன் கண்டதைச் சொன்னான்.

பாபம், அந்த ஏழை வாலிபன், பிரயாணத்தில் எப்போதேனும் சாப்பாடு கிடைக்காமல் பசி எடுத்தால், தின்று தண்ணீர் குடிக்கலாமே என்று, முன்ஜாக்கிரதையாக கொஞ்சம் கடலைப் பட்டாணியை சேமித்து வைத்திருந்தான். 'இது ராஜ அரண்மனையில் அடிக்கடி கீழே கொட்டிப் போவதால், இனி இதை வைத்திருக்கக் கூடாது' என்று வாலிபன், அப்போதே இரவோடு இரவாக, படுக்கையிலேயே தின்று தீர்த்து விட்டான்.

மறுநாள் காலை மந்திரி, இராஜாவைக் கண்டு "மன்னரே, அந்த வாலிபர் இராஜ குலத்தைச் சேர்ந்த சுகப்புருஷன் என்றே தெரிகிறது. அம்சதூளிகா மஞ்சமின்றி அவருக்கு இரவெல்லாம் தூக்கமே வரவில்லை; எழுந்து எழுந்து, படுக்கையை தட்டித் துடைத்து நித்திரை கெட்டுப் போனார், பாபம்!" என்று சொன்னான்.

இந்த விஷயத்தை, ராஜன் தன் ராணிக்குச் சொன்னான். ராணிக்கு அளவிலா ஆனந்தம். தன் அருமை ராஜகுமாரிக்கேற்ற ராஜகுமாரன் கிடைத்து விட்டான் என்று மட்டிலா மகிழ்வு கொண்டாள் ராணி.

அன்று இராஜ குமாரிக்கு ஆண்டு விழா வைபவமும் விருந்தும் நடத்தினர். அன்றிரவு, அகாலத்தில் கடலைப் பட்டாணியை அதிகம் தின்று விட்டதால், அவனுக்கு வயிறு மந்தமாக யிருந்தது; பசியே இல்லை. எனவே அவன், அரசருடன் விருந்துண்ண நேரிட்ட போது, எதையும் நன்றாய் தின்னாமல் தொட்டுத் தொட்டுப் பார்த்து விட்டு விட்டான்.

இதைக்கண்டு, இராஜாவும் இராணியும் "ஆஹா! ராஜோபசாரமாக சமைத்த இந்த அரிய இனிய உணவுகளே, இந்த அழகிய வாலிபனுக்கு பிடிக்கவில்லை யென்றால், இவன் நம்மைவிட பெரிய ராஜனுக்கான இளவரசன் போலிருக்கிறதே! கட்டாயம் இவனுக்கே நம்

குமாரியை மணமுடித்துக் கொடுத்து, அவன் ராஜியத்துக்கே அனுப்ப வேண்டும்'' என்று முடிவு செய்து கொண்டனர்.

வாலிபனை வற்புறுத்தி அரண்மனையிலேயே வைத்துக் கொண்டனர். சீக்கிரமே நல்ல நாளொன்று பார்த்து, அரசிளங்குமரி ஷஹர்ஜாதியை அலங்கரித்து, நாடோடி குல்ஷாவையும் சம்மதிக்க வைத்து, கல்யாண வைபவம் விமரிசையாக செய்து முடித்து வைத்து விட்டனர்.

ஷஹர்ஜாதியும்-குல்ஷாவும் கணவன் மனைவியாய், தம்பதிகளாய் விட்டனர். நாடோடி குல்ஷா தனக்கு இன்னும் என்னென்ன சோதனைகள் நடைபெறுமோ என்று பயந்து கொண்டிருந்தான். 'நான் அரச குமாரனல்ல' என்பதை அவனால் நிரூபிக்க முடியவில்லை; பாபம்.

சிலநாள் சென்றன. இனியும் அரண்மனையிலேயே இருந்தால் என்ன ஆகுமோ என்று அஞ்சிய நாடோடி குல்ஷா, அரசரைக் கண்டு "நான் என் ஊரை விட்டுவந்து வெகு நாளாய் விட்டது; நான் போக வேண்டும்; என்னை அனுப்பி விடுங்கள்'' என்று கேட்டுக் கொண்டான்.

"சரி, உன் இஷ்டம் போல் போய்வா. ஆனால் உன் மனைவியாய் விட்ட இளவரசி ஷஹர்ஜாதியையும் கூடவே அழைத்துப்போ'' என்று அனுப்பி வைத்தார்கள்.

பத்தினியான அந்த இளவரசியும் "சுகத்திலும் துக்கத்திலும் நான், என் கணவனுடனேயே இருப்பேன்'' என்று கூறி தாய் தந்தையிடம் விடை பெற்றுக் கொண்டு, கூடவே புறப்படத் தயாராய் விட்டாள்.

'விதியை வெல்ல யாரால் முடியும்' என்பதில் திடநம்பிக்கைக் கொண்ட ஏழை குல்ஷா, இளவரசியாகிய தன் மனைவியை அழைத்துக் கொண்டு, கால் நடையாகவே ராஜ்யத்தை விட்டுப் புறப்பட்டான். பாபம், அவன் நிலைமை தர்ம சங்கடமாய் இருந்தது. எந்த ராஜ்யத்திற்குப் போய் 'இதுதான் என் ராஜ்யம்' என்று சொல்ல முடியும் அவனால்! சில சமயம் 'இளவரசியை காட்டிலேயோ, வழியிலேயோ, தூங்கும்போதோ விட்டு விட்டு, தப்பி ஓடிப்போகலாமா' என்றும் எண்ணினான். ஆனால் இப்படிச் செய்வது பத்தினித் துரோகம் என்று மனதை தேற்றிக் கொண்டான். எனவே, இருவரும் இணை பிரியாமல் பலநாள் நடந்து ஊர் ஊராய் போய்க்கொண்டிருந்தனர்.

கடைசியாய் தார்கந்து என்ற நகரத்துக்குப் போய்ச் சேர்ந்தனர். அங்கு கடைத் தெரு இருந்ததால், குல்ஷா இளவரசியிடமிருந்த சில நகைகளை விற்று, பணத்தை எடுத்துக் கொண்டு, ஒரு கிழவி நடத்திக் கொண்டிருந்த சாப்பாட்டு விடுதியில் தங்கியிருந்தனர்.

காலங்கண்ட அந்தக் கிழவி, வந்திருக்கும் வாலிபனையும் அழகிய பெண்ணையும் கூர்ந்து நோக்கினாள். அவளுக்கு சந்தேகம் ஏற்பட்டது. யுவதியை கேட்டு, அவள் ராஜகுமாரி என்று தெரிந்து கொண்டாள். ஆகவே, வாலிபனும் ஒரு ராஜகுமாரனாகத்தான் இருக்க வேண்டுமென்று நம்பி கேட்டாள். ஆனால், அதை அந்த வாலிபன் ஒத்துக்கொள்ளாததால், மேலும் நன்றாய் யோசித்துப் பார்த்தாள். பளிச்சென்று அவளுக்கு 20 வருஷங்களுக்கு முன் நிகழ்ந்த பழைய சம்பவமொன்று ஞாபகத்துக்கு வந்தது. அதாவது: "அந்த தார்க்கந்து தேசத்து ராஜனுக்கு ஒரு ஆண்பிள்ளை யிருந்தான். 4 வயதுக் குழந்தையா யிருந்த போது, யாரோ சதிகார கள்ளர்கள் குழந்தையை தூக்கிக்கொண்டு போய்விட்டனர்; அதன் பின் இதுவரை பிள்ளையின் தகவலே தெரியவில்லை; எனவே, இந்த ராஜக்களையுள்ள அழகிய வாலிபன், பால்யத்தில் காணுமற்போன ராஜ குழந்தையாகத்தான் இருக்கவேண்டும்" என்று யோசித்து முடிவு செய்தாள்.

உடனே ஓடோடி அரண்மனைக்குப் போய், தார்கந்து ராஜாவையும் ராணியையும் கண்டு, "பாதுஷாவே, 20 வருஷங்களுக்குமுன் கள்வர் கூட்டம் தூக்கிக்கொண்டு போய்விட்ட தங்கள் அருமைக் குழந்தையான ராஜகுமாரனை நான் கண்டுபிடித்து வந்திருக்கிறேன். அதிருஷ்டவசமாக, பரிஸ்தான் தேசத்து ராஜகுமாரி ஷஹர்ஜாதையும் மணந்து வந்திருக்கிறான். வாருங்கள்; என்ஜாகையில் வந்து பாருங்கள்" என்று தம்பதிகளையும் மந்திரி பிரதானிகளையும் அழைத்து வந்து, நாடோடி குல்ஷாவையும், இளவரசி ஷஹர் ஜாதியையும் காட்டினாள்.

ராஜாவும் ராணியும், குல்ஷாவைக் கண்டு மனம் பூரித்து ஆனந்தக் கண்ணீர் விட்டு "என் மகனே! என்கண்ணே! என் செல்வமே!!" என்று கட்டி அணைத்துக் கொண்டனர்.

பாபம்! ஏழை வாலிபன் நாடோடி குல்ஷா, திகைத்துப்போனான். "நான் இளவரசன் அல்ல என்று சொன்னால் யாருமே நம்பமாட்டார்கள். எல்லாம், ஆண்டவன் காட்டத்தின்படியும் விதிவசப் பிரகாரமுமே நடக்கும்" என்று பேசாமல் இருந்துவிட்டான். மௌனம் சர்வார்த்த சாதனம் அல்லவா?

இளவரசி ஷஹர்ஜாதும் மனம் பூரித்து நாடோடி இளவரசனுன தன் கணவன் மீது சாய்ந்து, முழங்கையால் இடித்து "இவ்வளவு நாளாக தாங்கள் ஏமாற்றினீர்களே! தாங்கள் ஒரு அரசகுமாரர்தான் என்பது இப்போது அம்பலமாய் விட்டது, பார்த்தீர்களா? இனி என்ன, மறுத்துச் சொல்லப் போகிறீர்களா? வாருங்கள்; உங்கள் பெற்றோருக்கு ஸலாம் செய்து, வணக்கம் செலுத்துவோம்" என்று அன்புடன் கையைப் பிடித்து இழுத்தாள். அவளுடன் சிரித்துக் கொண்டு அல்லாஹ்வின் கிருபையால் அதிருஷ்டவசமாய் கிடைத்த தாய் தந்தை போன்ற ராஜாவையும் ராணியையும் பணிந்து ஸலாமும் ஆதாபும் செய்தான்.

பெரியோர்கள், தங்கள் செல்வக் குமரனையும் செல்வ மருமகளை யும் ஆசீர்வதித்து துஆ செய்தனர்.

அதிருஷ்டம் என்றால் இதுவன்றோ அதிருஷ்டம்!

"எல்லாம் அவன் செயல்!"


## ஹஸ்ரத் ஷம்ஸ் தப்ரேஸ் அவர்களின் சரிதை.

இதில் ஹஸ்ரத் ஷம்ஸ் தப்ரேஸ் அவர்களின் பிறப்பும் குழந்தை பருவமும், அவர்கள் மௌலானா ரூம் அவர்களைச் சந்தித்ததும், இருவர்களுக்குமுள்ள சம்பந்தமும், ஹஸ்ரத் ஷம்ஸ் தப்ரேஸ் அவர்கள் கொலை யுண்டதும் விவரிக்கப் பட்டுள்ளது. அத்துடன் அவர்களின் குணநிசயங்களும், அவர்களின் உபதேசங்களும் அடங்கியுள்ளன.

இதன் விலை அணா. 10

கிடைக்குமிடம் :—

ஹாஜி எம். ஏ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்

நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.


Edited by M. S. ABDUL KHUDUS.
Published by Hajee M. A. Shahul Hameed & Sons.
Printed at Shahul Hameedia Press, Madras.

18751

# அறவாழ்க்கை யளித்த இறைதூதர்!

(வேளாங்கண்ணி—கவிஞர் சாந்திதாஸன்)

சிற்பங்கள் தனைகாட்டி சிரம்பணிந்து
அற்பசுகபோகமதை அரவணைத்து
நற்கிரியை நினைவின்றி கலிவிலாழ்ந்து
தற்பெருமை யுற்றிருந்த மாந்தரிடை ! (1)

பதின்மூன்று நூற்றாண்டின் பாசறையாய்
மதி என்னும் வாளேந்தி தளபதியாய்
இதிகாசம் எரிந்துபட வழி காட்டியாய்
ததிசீர் நபிகள் கோன் தோன்றினார்கள் ! (2)

பஞ்சடர்ந்தப் பாலையினிற் புதுமைப்பூக்க
வஞ்ச கத்தோர் வழி கேட்டில்வளம் தேக்க
அஞ்சாமை ஆத்மீகம் தழைத்து நிற்க
செஞ்சுடராய் நபிகள்கோன் தோன்றினார்கள் ! (3)

அபிமான ஆய்வு ஒன்றே பயன் ஊக்க
உபவாச துறவிகளும் உடல் நடுங்க
ரபீவுல் அவ்வல்மதி பன்னிரெண்டாக
நபிகள்கோன் நீனிலத்தே தோன்றினார்கள் ! (4)

இருபத்தி ஐந்தாண்டில் இணையில்லாத
உரையாலே ஒழுக்கமுறும் வாகைப்போத
வரையறையிற் பச்சிளம் பிறைச்சின்னத்தை
மறையாது ஒளிரச்செய்த நபிகள்கோன் தோன்றினார்கள்! (5)

பிறநாட்டார் சரிதையினும் அப்பெரியார் நாமம்
வருணனையாய் பொதிந்திருக்க கண்டோம் நாமும்
ஒரு குற்றம் காணாத உயர்ந்த பண்பாய்
அறவாழ்க்கை யளித்த இறைதூதர் தோன்றினார்கள் ! (6)

காமில் ஒலி ஹஸ்ரத்

## அபூபக்கர் ஷிப்லி (ரலி) ஜீவிய சரித்திரம்

தௌஹீத் என்னும் ஏக தெய்வத்துவத்தை அறிய, சுக போகங்களை விட்டு பக்கீர் கோலம் கொண்டு ஹக்கைக் கண்ட மஹான் ஷிப்லி (ரலி) அவர்கள் ஞான மார்க்கமான தஸவ்வுபுடைய தீர்க்கத்தைக் கண்டறிந்த வரலாறும், அவர்கள் புரிந்த போதனைகளும், அவர்களின் ஜீவியமும் அடங்கியது. விலை ரூ. 1—12—0

திருச்சி

## ஹஸ்ரத் நத்ஹர் அவ்லியா அவர்களின் சரித்திரச் சுருக்கம்

இதில் ஹஸ்ரத் நத்ஹர் அவ்லியா அவர்கள் ஒரு அரச குமாரனாகயிருந்து தனது தந்தை காலஞ் சென்ற பின் தானே நீதிநெறியுடன் அரசு புரிந்து வரும் காலத்தில், ஓர் சொர்ப்பனங் கண்டதின் காரணமாக, சிம்மாசனத்தை விட்டு ஷய்க்கைத் தேடிச் சென்று, முரீது வாங்கியதும், பின்பு பிரயாணத்தில் தங்களுக்கு எதிராக வந்த அநேக பூதங்களை எதிர்த்து வென்றதும், பின் இலங்கைக்கு போய் ஆதம் (அலை) மலையில் ஹஸ்ரத் ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களைச் சந்தித்து, 'தப்லே ஆலம்' என்னும் பட்டத்தைப் பெற்ற பின் திருச்சி வந்ததும், அவர்கள் செய்த கருமத் அற்புதங்களும், அவர்களின் வபாத்தும் மிக விபரமாக விளக்கப்பட்டிருக்கிறது. இதன் விலை அணா 8

கிடைக்குமிடம் :—

ஹாஜி M. A. ஷாஹுல் ஹமீது & ஸன்ஸ்,
நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.